107/1-59

107

# இலக்கணமும் கட்டுரையும்

முதல் படிவத்திற்கு

[1949ஆம் வருடத்திய பாடத்திட்டப்படி
தயாரிக்கப் பெற்றது]

TB
P31(b)
N58
86832

அ. முத்துசாமி பிள்ளை
நா. கிருஷ்ணசாமி

107/1-79

# இலக்கணமும் கட்டுரையும்

( படங்களுடன் )

**முதல் படிவத்திற்கு**

[1949ஆம் வருடத்திய புதிய பாடத் திட்டத்தையொட்டி
எழுதப் பெற்றது]

மதுரை, தூய மரியன்னை உயர்நிலைப் பள்ளி
தலைமைத் தமிழாசிரியர்
**உயர்திரு. அ. முத்துசாமி பிள்ளை அவர்களும்**

மதுரை, சேதுபதி உயர்நிலைப் பள்ளி
தலைமைத் தமிழாசிரியர்
**உயர்திரு. நா. கிருஷ்ணசாமி அவர்களும்**
எழுதியது



பிரசுரகர்த்தர்
**வி. ரூ. சுவாமிநாதன்**

மதுரை : : சென்னை-1

பதிப்புரிமை] [விலை 90 ந. பை.

Revised Edition—1958

பாரதி பிரஸ், மதுரை;—58.

# முன்னுரை

உயர்நிலைப் பள்ளிகளிற் கல்விபயிலும் சிறுவர்கள் இளம் வயதிலிருந்து தாய்மொழியில் நல்ல பற்றும் தேர்ச்சியும் பெறவேண்டும் என்னும் நோக்கத்துடன் அரசியலார் வகுத்த பாடத்திட்டங்களுக்கு இணங்கத் தற்காலத்தில் எத்தனையோ இலக்கண நூல்கள் வெளி வருகின்றன.

சென்னை அரசாங்கத்தார் சமீபத்தில் வெளியிட்ட புதிய இலக்கணப் பாடத்திட்டத்தையொட்டி முதலாவது படிவத்திற்கு ஏற்றவாறு இலக்கணமும் கட்டுரையும் என்னும் தலைப்புடன் இப்புத்தகம் எழுதப் பெற்றிருக் கிறது.

இலக்கணம் என்ற பகுதியில் சொற்றொடரின் பொது இலக்கணம், சொற்றொடர் வகைகள், வேற்றுமை உருபுகள், எச்ச வகைகள், புணர்ச்சி, உடம்படுமெய், சொற்றொடர் மாற்றம் போன்றவை உதாரணத்தின் மூலம் விதிகளை வருவித்தல் என்ற முறைக்கு ஏற்ப மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. உச்சரிப்புப் போன்ற சிற்சில இடங்களில் மாணவர்களுக் குத் தெளிவாக விளங்கும் பொருட்டு, சிற்சில மாறுதல் கள் செய்யப்பட்டிருக்கின்றன.

கட்டுரை என்ற பகுதியில் இனிய கதைப்பகுதிகள், படம் பார்த்து எழுதுதல், கைத்தொழில்கள், விவசாய முறைகள், திருவிழாக்கள், உரையாடல், நாட்குறிப்புத் தயாரித்தல், செய்தித்தாள்களுக்குக் கட்டுரை எழுதுதல், பல வகைக் கடிதங்கள் எழுதுதல் போன்ற இன்றியமை யாத செய்திகள் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு கட்டுரையின் இறுதியிலும் மாணவர்கள் முன்பு படித்த இலக்கணப் பயிற்சிகள் சிறந்த முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

புதிய முறையில் எழுதப்பட்டுள்ள இப்புத்தகம் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதனைக் கண்ணுறும் ஆசிரியர்களும், பள்ளிக் கூடத் தலைவர்களும் இதனைப் பாடப் புத்தகமாக வைத்து எம்மை மேலும் மேலும் ஊக்குவார்கள் என நம்புகிறோம். இந்நூல் இன்னும் சிறந்து விளங்குவதற்கு வேண்டிய கருத்துக்களைத் தெரிவித்தால் அவற்றை நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

ஆக்கியோர்

## II கட்டுரைக்கான பாடத்திட்டம்

குறிப்பு :—மொழி கற்பிப்பதில், வியாசம் அல்லது கட்டுரை எழுதுதல், அவசியமானதும் மிக முக்கியமானதுமான பகுதியாகக் கருதப்படவேண்டும். ஒவ்வொரு பயிற்சியும் மாணவர்களின் நடவடிக்கைகளையும் அனுபவங்களையுமே குறித்தும், "செய்தியும்" குறிப்பும்" என்ற தமது புத்தகத்தில் சர். பிலிப் ஹார்டாக் என்னும் ஆசிரியர் கூறியுள்ள விளக்கப்படியும் விவரப்படியும் உள்ள ஒரு "குறிப்பு" அல்லது "செய்தி"யாக விளங்கும் நோக்கங் கொண்டதாகவும் இருக்க வேண்டும். பொதுவாக சொற்றொடர்களை மாற்றியமைத்தல், சேர்த்தல் முதலிய மொழியமைப்புப் பயிற்சிகளில் விரிவாகக் கவனம் செலுத்த வேண்டியது முக்கியமான போதிலும், அப்பயிற்சிகளை இலக்கணப் பாடத்தின் பகுதியாகவே நடத்துதல் நலம். ஏனெனில், சரியான முறையில் கையாண்டால் வியாசம் அல்லது கட்டுரைக்காக எவ்வளவு நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வளவு நேரமும் அதற்கு அவசியமே என்பது நன்கு புலப்படும்.

மொழியின் நடை, எளியதாகவும், தெளிவாகவும், சரியானதாகவும், மொழிவழக்குப்படியும், நன்கு விளங்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஒரு செய்தியைப் பகுதி பகுதியாகத் தருவதன் நோக்கமும், நல்ல பகுதியின் அமைப்பு, பண்பு முதலியவைகளும், நிறுத்தல், கோடிடுதல், தலைப்பு, துணைத் தலைப்புக் கொடுத்தல் முதலியவைகளின் இன்றியமையாமையையும் பற்றி, பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட எல்லா இடங்களிலும் எல்லாச் செய்திகளையொட்டியும் கற்பிக்கப்படவேண்டும்.

முதல் படிவம்

புத்தக சாலேயில் வாசித்த புத்தகங்களிலிருந்து இனிய கதைகளேயும் செய்திகளேயும் பழக்கத்திலுள்ள பொது நூல்களிலிருந்து நல்ல பகுதிகள் அல்லது செய்திகளேயும் மாணவர்கள் தேர்ந்தெடுத்து எழுதுதல். குறிப்புக்களிலிருந்து கதை அல்லது நிகழ்ச்சியைத் தெளிவாக எழுதுதல், படங்கள், நிகழ்ச்சிகள், விவசாய, கிராமக் கைத்தொழில் முறைகள், திருவிழாக்கள் முதலியவைகளேக் கவனித்து வாய்மொழியாகச் சொல்லியும் எழுதியும் விவரித்தல். வாசித்த விடயங்களேச் சுருக்கி எழுதுதல். கீழ்வகுப்புக்களில் ஆரம்பித்த நாட்குறிப்பைத் தொடர்ந்து எழுதுதல், வயதுக்கும் பழக்கவழக்கத்திற்கும் ஏற்ப அதனே விரிவுபடுத்தல். குறிப்புக்கள் உதவியின்றிக் கதை எழுதுதல். பள்ளிக்கூடத்துக் கையெழுத்துப் பத்திரிகைக்கோ அச்சுப் பத்திரிகைக்கோ விடயதானஞ் செய்தல். கடிதம் எழுதுதல், அழைப்புக்கள், சமூக விடயங்கள் முதலியன பெரியோருக்குச் சிறியோரும், சிறியோருக்குப் பெரியோரும் எழுதும் விதங்கள். பேச்சுகள்—நண்பர்களிடை, மற்றவர்களுடன் ஆசிரியர் மாணவர்களிடை.

III இலக்கணப் பாடத்திட்டத்தைப்
பொருளடக்கத்தில் காண்க.

# பொருளடக்கம்


| வரிசை | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | **I இலக்கணம்** | | |
| I | சொற்றொடர் | .... | 9 |
| II | பெயர்ச்சொல் | ... | 11 |
| III | வினைச் சொல் | ... | 19 |
| IV | எழுத்து | ... | 23 |
| V | புணர்ச்சி | ... | 32 |
| | **II மொழிப் பயிற்சி** | | |
| I | சொற்றொடர் | ... | 38 |
| II | சொற்றொடரில் உறுப்புக்கள் நிற்கும் முறை | ... | 40 |
| III | சொற்றொடர்ப் பொருத்தம் | .... | 41 |
| IV | இடம் விட்டு எழுதுதல் | .... | 43 |
| V | சேர்த்தெழுதுதல் | .... | 44 |
| VI | சொற் பொருத்தம் | .... | 44 |
| VII | நிறுத்தக் குறிகள் | .... | 45 |
| VIII | தொடர் மாற்றம் | ... | 47 |
| IX | வல்லெழுத்து மிகும் இடமும் மிகா இடமும் | ... | 49 |
| | **III கட்டுரை** | | |
| I | கட்டுரை எழுதும் முறை | ... | 52 |
| II | இனிய கதைகளைத் தேர்ந்தெடுத்தல் | ... | 53 |
| III | நல்ல பகுதிகள்—முக்கியச் செய்திகள் | ... | 60 |

| | | |
|---|---|---|
| IV | குறிப்புக்களிலிருந்து கதை—நிகழ்ச்சி எழுதுதல் | ... 62 |
| V | படம் பார்த்து விளக்கி எழுதுதல் | ... 65 |
| VI | கிராமக் கைத்தொழில்கள் | ... 67 |
| VII | விவசாய முறைகள் | ... 73 |
| VIII | திருவிழாக்கள் | .... 76 |
| IX | நாட்குறிப்பு எழுதுதல் | ... 81 |
| X | குறிப்புகளின்றிக் கதை எழுதுதல் | ... 83 |
| XI | விடயதானஞ் செய்தல் | ... 84 |
| XII | கடிதங்கள் | ... 88 |
| XIII | உரையாடல்கள் | ... 95 |

## முதல் படிவத்திற்கு

# I இலக்கணம்

## I சொற்றொடர்

### 1. சொற்றொடரின் பொது இலக்கணம்

மரம் அசைந்தது.
குதிரை ஓடிற்று.

இவற்றில் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிற்கின்றன. இவ்வாறு இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து வந்தால், அவை வாக்கியம் என்றும் சொற்றொடர் என்றும் கூறப்படும்.

### 2. தொடரின் வகைகள்

வாக்கியம், செய்தி வாக்கியம், கட்டளை வாக்கியம், வினா வாக்கியம், உணர்ச்சி வாக்கியம் என நான்கு வகைப்படும்.

1. முருகன் படித்தான். இச்சொற்றொடர் முருகன் செய்கையாகிய படித்தலைத் தெரிவிப்பதால் இது செய்தி வாக்கியம் என்று கூறப்படும்.

2. நீ இக்கதையைச் சுருக்கி எழுது. இத்தொடர் கட்டளை இடுவதால் கட்டளை வாக்கியம் என்று கூறப்படும்.

3. நீ பாடம் படித்தாயா? இச் சொற்றொடர் கேள்வி கேட்கும் பொருளில் வருவதால் வினா வாக்கியம் என்று கூறப்படும்.

4. இக் கட்டடம் என்ன அழகாக இருக்கிறது! ஒருவருடைய மனத்தில் தோன்றும் உணர்ச்சியைத் தெரிவிப்பதால் உணர்ச்சி வாக்கியம் என்று கூறப் படும்.

பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களை இன்ன இன்ன வாக்கியம் எனக் குறிப்பிடு :—

1. தேனும் இப்பழத்திற்கு ஈடாகுமா?
2. முடவனுக்குக் கொம்புத்தேன் கிட்டுமா?
3. ஒரு படம் வரைந்து காட்டுக.
4. அவள் பள்ளிக்குச் சென்றாள்.
5. காகம் கரைந்தது.

### 3. சொற்றொடரின் உறுப்புக்கள்

உ-ம் :—கன்று பாலைக் குடித்தது.

இத் தொடரில் கன்று, பால், குடித்தது என்னும் மூன்று சொற்கள் இருப்பதைக் காணலாம். இவற்றுள் குடித்தது என்பது முடிந்த சொல். அதுவே பயனிலை. அதனை வைத்துக்கொண்டு எது என்ற கேள்வி கேட்டால், கன்று என்னும் விடை வரும். அதுவே எழுவாய். எதைக் குடித்தது என்னும் கேள்வி கேட்கும்போது, பாலை என்னும் விடை வரும். அது செயப்படுபொருள். இவ்வாறே எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை அறியவேண்டும்.

இவையே சொற்றொடரின் உறுப்புக்கள் எனப்படும். சில தொடர்களில் எழுவாய் பயனிலை மட்டும் வரும்.

உ-ம் :—சீதை நடந்தாள்.

பயிற்சி

கீழ்வரும் சொற்றொடர்களிலுள்ள எழுவாய், பயனிலை செயப்படுபொருளைக் கண்டுபிடி :—

1. பறவை பறந்தது.
2. இராமன் இராவணனை வென்றான்.
3. பசு புல்லை மேய்ந்தது.
4. வேலன் மதுரையை அடைந்தான்.

## II பெயர்ச் சொல்

1. பெயர்

(1) மனிதன், பறவை, மண். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கின்றது. இது பொருட் பெயர் என்று கூறப்படும்.

(2) சென்னை, கோவில், காடு. இவை ஒவ்வோர் இடத்தைக் குறிக்கின்றது. இது இடப்பெயர் என்று கூறப்படும்.

(3) ஆனி, கார்த்திகை, வெள்ளி. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தைக் குறிக்கின்றது. இது காலப் பெயர் என்று கூறப்படும்.

(4) தலை, பூ, இலை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு உறுப்பைக் குறிக்கின்றது. இது சினைப் பெயர் என்று கூறப்படும்.

(5) கருமை, அழகு, வெண்மை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணத்தைக் குறிக்கின்றது. இது பண்புப்பெயர் எனப்படும்.

(6) நடத்தல், படித்தல், விளையாட்டு. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலைக் குறிக்கின்றது. இது தொழிற்பெயர் என்று கூறப்படும்.

இவ்வாறு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றைக் குறிப்பதால் பெயர்ச் சொற்கள் ஆறு வகைப்படும்.

பயிற்சி

கீழ்வரும் தொடர்களிலுள்ள பெயர்களை இன்ன இன்ன பெயர்ச்சொற்கள் என எடுத்தெழுது:—

1. நான் மதுரைக்குச் சென்றேன்.
2. சந்திரன் இரவில் உதிக்கிருன்.
3. கடல் கருமை நிறம்.
4. பால் இனிமையாக இருக்கும்.
5. பறவை கூடு கட்டி வாழும்.
6. அவன் காலால் நடந்து சென்ருன்.
7. மல்லிகைப்பூ மலர்ந்தது.

2. திணை

கண்ணன், வேலன். இவை மனிதரைக் குறிக்கும் பெயர்கள். சந்திரன், சூரியன். இவை தேவரைக் குறிக்கும் பெயர்கள். மனிதரும் தேவரும் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் அறிவுள்ளவர்கள். ஆகையால் உயர்திணைப் பொருள்கள் ஆவார்கள். இவ்வாறு மனிதர்களையும் தேவர்களையும் குறிக்கும் பெயர்கள் உயர்திணைப் பெயர்கள். (உயர்திணை = உயர்வாகிய குலம்.)

எருது, காக்கை. இவை உயிருள்ள பொருள் கள். மலை, மண் இவை உயிரில்லாத பொருள்கள்.

இவைகளெல்லாம் பகுத்தறியும் அறிவில்லாதன. ஆகையால் அஃறிணைப் பொருள்கள் என்று கூறப் படும். இவ்வாறு உயிருள்ளனவும் இல்லாதனவு மாகிய பகுத்தறிவில்லாத பொருள்களைக் குறிக்கும் பெயர்களெல்லாம் அஃறிணைப் பெயர்களாம். [அல் + திணை = அஃறிணை—(உயர்ந்த குலம்) அல்லாத குலம்]

பயிற்சி

கீழ்க்கண்ட பெயர்களில் ஒவ்வொன்றும் என் னென்ன திணையைச் சேர்ந்தது :—

கடல், வேடன், முருகன், புழு, சீதை, மரம், கப்பல், இலை, படம், உழவர், சுவர்.

3. பால்

அவன், நண்பன். இவைகளில் ஒவ்வொன்றும் உயர்திணையில் ஓர் ஆண்மகனைக் குறிக்கின்றது. இவ்வாறு ஆண்மகனைக் குறிக்கும் சொற்கள் ஆண் பாற் சொற்களாகும்.

அவள், தோழி. இவைகளில் ஒவ்வொன்றும் ஒரு பெண்ணைக் குறிக்கின்றது. இவ்வாறு பெண்ணைக் குறிக்கும் சொற்கள் பெண்பாற் சொற்களாம்.

மன்னர்கள், இது உயர்திணையில் பல ஆண் களைக் குறிக்கின்றது. அரசிகள், இது உயர்திணை யில் பல பெண்களைக் குறிக்கின்றது. மக்கள், இது உயர்திணையில் பல ஆண்களையும் பல பெண்களை யும் குறிக்கின்றது. இவ்வாறு பலரைக் குறிக்கும் சொற்கள் பலர்பாற் சொற்களாம்.

மரம், கனி. இவற்றில் ஒவ்வொன்றும் அஃறிணையில் ஒரு பொருளை மட்டும் குறிக்கின்றது. இவ்வாறு ஒன்றை மட்டும் குறிக்கும் சொற்கள் ஒன்றன்பாற் சொற்களாம்.

பழங்கள், காய்கள். இவற்றில் ஒவ்வொன்றும் அஃறிணையில் பல பொருள்களைக் குறிக்கின்றது. இவ்வாறு பலவற்றைக் குறிக்கும் சொற்கள் பலவின் பாற் சொற்களாம். எனவே, உயர்திணையில் ஆண் பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்று பால்களும், அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டு பால்களும் இருப்பதைக் காணலாம்.

4. எண்.

பசு, யானை. இவைகளில் ஒவ்வொன்றும் ஒரு பொருளையே குறிப்பதால் ஒருமை எண் எனப்படும்.

பசுக்கள், யானைகள். இவைகளில் ஒவ்வொன்றும் பல பொருள்களைக் குறிப்பதால் பன்மை எண் எனப்படும். எனவே, எண்கள் ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும்.

பயிற்சி

கீழ்வரும் சொற்களிலுள்ள பால்களையும் எண்களையும் எடுத்து எழுது :—

வீரன், அருவி, எழுத்துக்கள், கோபுரம், தந்தை, நண்பர்கள், தோழியர்கள், சிநேகிதன், குளம், அரசர்.

5. இடம்.

இடம் என்பது சொற்கள் வழங்கும் இடத்தைக் குறிப்பதாகும். அது தன்மை இடம், முன்னிலை இடம், படர்க்கை இடம் என மூன்று வகைப்படும்.

நான், யான், நாம், நாங்கள், யாங்கள். இவை பேசுகின்றவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் குறிப்பதால் தன்மை இடத்திற்குரிய பெயர்கள் எனப் படும்.

நீ, நீர், நீங்கள். இவை முன்னே நின்று கேட்ப வனையும், அவனைச் சேர்ந்தவர்களையும் குறிப்பதால் முன்னிலை இடத்திற்குரிய பெயர்கள் எனப்படும்.

அவன், அவள், அவர், அது, அவை, இராமன், மாதர்கள், பிராணி. இவை பேசுபவனும் முன்னின்று கேட்பவனும் அல்லாத மூன்றுமிடத்தைக் குறிப்பதால் படர்க்கை இடத்திற்குரிய பெயர்கள் எனப்படும். எனவே, தன்மை இடம், முன்னிலை இடம், படர்க்கை இடம் என இடம் மூன்று வகைப்படும்.

பயிற்சி

கீழ்வரும் தொடர்களிலுள்ள மூன்று இடத்துச் சொற்களையும் தனித்தனியே பிரித்து எழுது :—

1. நீ அவனைப் பார்த்தாயா ?
2. நான் உனக்குப் புத்தகம் தருகிறேன்,
3. நாங்கள் அவர்களுடன் சென்னைக்குச் சென்றோம்.
4. ஆசிரியர் மாணவர்க்குப் பாடம் கற்பித்தார்.
5. தங்கை சோறு சமைத்தாள்.

6. வேற்றுமை

(a) உருபுமட்டும்

கண்ணன் வந்தான். கண்ணனைக் கண்டேன். இவ்வாக்கியங்களில் கண்ணன் என்பது ஒருவகை யான பொருளைக் கொடுக்கிறது. கண்ணனை என்பது வேறு வகையான பொருளைக் கொடுக்கிறது. இவ்

வாறு பொருள் வேறுபாட்டைக் காட்டுகிற அடையாளம் எது? ஐ என்பதாகும். இவ்வாறு பெயரின் பொருளை வேறுபடுத்திக் காட்டுகின்ற உருபுகள் வேற்றுமை உருபுகள் என்று கூறப்படும்.

இவ்வேற்றுமை, முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை :—உருபை ஏற்காத பெயர்ச்சொற்களெல்லாம் முதல் வேற்றுமையாகும். இது எழுவாய் வேற்றுமை என்றும் கூறப்படும். இதற்குத் தனியே உருபு கிடையாது.

உ-ம் :—சீதை பாடினாள்.
இராமன் சென்றான்.

இரண்டாம் வேற்றுமை :—இதன் உருபு, ஐ ஒன்றே ஆகும்.

உ-ம் :—மரத்தை வெட்டினான்.
புத்தகத்தைப் படித்தான்.

மூன்றாம் வேற்றுமை :—இதன் உருபு, ஆல், ஆன், ஒடு, ஓடு என்னும் நான்குமாகும்.

உ-ம் :—மண்வெட்டியால் வெட்டினான்.
தாயொடு மகள் சென்றாள்.
தந்தையோடு மகன் வந்தான்.

நான்காம் வேற்றுமை :—இதன் உருபு, கு ஒன்றே ஆகும்.

உ - ம் :—ஏழைகளுக்குச் சோறு கொடுத்தான்.
பூனைக்குப் பகை நாய்.

ஐந்தாம் வேற்றுமை :—இதன் உருபு, இல், இன், என்னும் இரண்டுமாம்.

உ - ம் :—கொடுப்பதில் சிறந்தவன் குமணன்.
மதுரையின் கிழக்கே மானமதுரை.

ஆறும் வேற்றுமை :—இதன் உருபு, அது, ஆது, அ என்னும் மூன்றுமாம்.

உ - ம் :—எனது பள்ளிக்கூடம்.
என கைகள்.

ஏழாம் வேற்றுமை :—இதன் உருபு, இல், இடம், கண் முதலியனவாம்.

உ - ம் :—மதுரையில் வசித்தான்.
கோவிந்தனிடம் வாங்கினான்.
பறவை மரத்தின்கண் வசிக்கிறது.

எட்டாம் வேற்றுமை :—இதற்குத் தனி உருபு கிடையாது. ஆனால், பெயர்ச்சொற்களின் கடைசி எழுத்துத் திரிந்து வருதலும், கடைசி எழுத்துக் கெட்டு வருதலும், கடைசியில் ஓர் எழுத்து மிகுந்து வருதலும், கடைசி எழுத்துக்கு முன்னெழுத்துத் திரிந்து வருதலும் இயல்பாக வருதலும் இதன் உருபாகும்.

உ - ம் :—பிள்ளை—பிள்ளாய்—ஈறு திரிதல்.
அரசன்—அரச—ஈறு கெடுதல்.
தந்தை—தந்தையே—ஈறு மிகுதல்.
மாணவர்கள்—மாணவர்காள்—ஈற்றய
லெழுத்துத் திரிதல்.

பயிற்சி

கீழ்க்கண்ட தொடர்களிலுள்ள உருபுகளைத் தனித் தனியே எடுத்தெழுது:—

இராமனுக்குத் தந்தை தசரதன்.
மனிதன் மரத்தை வெட்டினன்.
வேலன் மலையில் வசித்தான்.
கண்ணன் கல்லால் எறிந்தான்.
மகனே இங்கே வா.
முருகனது வேல்.
பையன் வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்றான்.

(b) தன்மை முன்னிலைப் பெயர்கள் உருபேற்றல்

யான் என்னும் தன்மை ஒருமைப் பெயர், உருபு ஏற்கும்போது என் என்று திரியும். யாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர், உருபு ஏற்கும்போது எம் எனத் திரியும்.

உ-ம்:—யான்+ஐ—என்னை. (இதேபோல் என்னால், எனக்கு, என்னின், எனது, என்கண்.)
யாம்+ஐ—எம்மை. (இதேபோல் எம்மால், எமக்கு, எம்மின், எமது, எம்கண்.)

நீ என்னும் முன்னிலை ஒருமைப் பெயர், உருபு ஏற்கும்போது நின் எனவும் உன் எனவும், நீர் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் நும் எனவும் உம் எனவும் திரிந்து வரும்.

உ-ம்:—நீ+ஐ—நின்னை. (இதேபோல் நின்னால், நினக்கு, நின்னின், நினது, நின்கண்.)
நீர்+ஐ—நும்மை. (இதேபோல் நும்மால், நுமக்கு, நும்மில், நுமது, நும்கண்.)

# III வினைச்சொல்

மரம் அசைந்தது.
பழம் விழுந்தது.

இத்தொடர்களில் அசைந்தது என்பது மரத்தின் தொழிலைக் குறிக்கின்றது. விழுந்தது என்பது பழத்தின் தொழிலைக் குறிக்கின்றது. இவ்வாறு ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொற்கள் வினைச்சொற்கள் என்று கூறப்படும்.

பயிற்சி

கீழ்வரும் தொடர்களிலுள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் தனித்தனியே எடுத்து எழுது:—

1. சங்கரன் சந்தனம் அரைக்கின்றான்.
2. மாணவர் பள்ளிக்குச் செல்கின்றனர்.
3. பறவைகள் வானத்தில் பறக்கின்றன.
4. சூரியன் காலையில் உதிக்கிறான்.

## 1. காலம்

வேலன் படித்தான்.
வேலன் படிக்கின்றான்.
வேலன் படிப்பான்.

வேலன் படித்தான் என்பதில், படித்தான் என்னும் சொல் தொழில் முன்னே நடந்ததைத் தெரிவிக்கின்றது. ஆதலால் இது இறந்த காலம் எனப்படும்.

வேலன் படிக்கின்றான் என்பதில், படிக்கின்றான் என்னும் சொல் தொழில் இப்பொழுது நடந்துகொண்டிருப்பதைத் தெரிவிக்கின்றது. ஆதலால் இது நிகழ்காலம் எனப்படும்.

வேலன் படிப்பான் என்பதில், படிப்பான் என்னும் சொல், தொழில் இனிமேல் நடக்கப் போவதைத் தெரிவிக்கின்றது. ஆதலால் இது எதிர்காலம் எனப்படும்.

எனவே காலம், இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும். இவை வினைச் சொற்களில் மட்டும் வரும்.

பயிற்சி

கீழ்வரும் தொடர்களிலுள்ள வினைச்சொற்கள் என்னென்ன காலம் காட்டுகின்றன :—

1. தவளைகள் தண்ணீரில் வாழ்கின்றன.
2. சீதை செடிகளை நீரூற்றி வளர்த்தாள்.
3. நான் நாளை மதுரைக்குப் போவேன்.
4. முருகன் பாடம் எழுதுகின்றான்.

## 2. முற்று

குதிரை ஓடிற்று.
கண்ணன் பாடினான்.

இத்தொடர்களிலுள்ள ஓடிற்று, பாடினான் என்னும் வினைச்சொற்கள் தொழில் முற்றுப் பெற்றிருப்பதைக் குறிக்கின்றன. இவ்வாறு முற்றுப் பெற்ற செயல்களைக் குறிக்கும் வினைச்சொற்கள் வினைமுற்றுக்கள் என்று கூறப்படும்.

வினைமுற்றுச் சொற்களில் செயலும் காலமும் பாலும் வெளிப்படையாகத் தெரியும். மற்றவை குறிப்பாகத் தெரியும்.

(1) தன்மை ஒருமை வினைமுற்று:—ஏன் என்னும் விகுதியைக் கடைசியில் பெற்றுவரும் வினை முற்று, தன்மை யொருமை வினை முற்று ஆகும்.

உ-ம் :—பாடினேன்.
படித்தேன்.

(2) தன்மைப் பன்மை வினைமுற்று:—ஓம் என்னும் விகுதியைக் கடைசியில் பெற்றுவரும் வினை முற்று, தன்மைப் பன்மை வினைமுற்றாகும்.

உ-ம் :—ஓடினோம்.
உண்டோம்.

(3) முன்னிலை யொருமை வினைமுற்று:— ஐ, ஆய், இ என்னும் விகுதிகளைக் கடைசியில் பெற்று வரும் வினை முற்றுக்கள், முன்னிலை யொருமை வினை முற்றுக்களாகும்.

உ-ம் :—உண்டனை.
படித்தாய்.
வருதி.

(4) முன்னிலைப் பன்மை வினைமுற்று:—இர், ஈர் என்னும் விகுதிகளைக் கடைசியில் பெற்றுவரும் வினை முற்றுக்கள், முன்னிலைப் பன்மை வினை முற்றுக்களாகும்.

உ-ம் :—ஆடினீர்.
உண்டீர்.

(5) படர்க்கை ஆண்பால் வினைமுற்று:—அன், ஆன், என்னும் விகுதிகளைக் கடைசியில் பெற்றுவரும் வினைமுற்றுக்கள், படர்க்கை ஆண்பால் வினைமுற்றுக் களாகும்.

உ-ம் :—படித்தனன்.
ஆடினான்.

(6) படர்க்கைப் பெண்பால் வினைமுற்று :— அள், ஆள் என்னும் விகுதிகளைக் கடைசியில் பெற்றுவரும் வினைமுற்றுக்கள், படர்க்கைப் பெண்பால் வினை முற்றுக்களாகும்.

உ-ம் :—நடந்தனள்.
ஆடினாள்.

(7) படர்க்கைப் பலர்பால் வினைமுற்று :—அர், ஆர் என்னும் விகுதிகளைக் கடைசியில் பெற்று வரும் வினைமுற்றுக்கள், படர்க்கைப் பலர் பால் வினை முற்றுக்களாகும்.

உ-ம் :—கேட்டனர்.
வந்தார்.

(8) படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று :— து, று என்னும் விகுதிகளைக் கடைசியில் பெற்றுவரும் வினை முற்றுக்கள், படர்க்கை ஒன்றன்பால் வினை முற்றுக் களாகும்.

உ-ம் :—உண்டது.
போயிற்று.

(9) படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று :— அ, ஆ என்னும் விகுதிகளைக் கடைசியில் பெற்று வரும் வினை முற்றுக்கள், படர்க்கைப் பலவின்பால் வினை முற்றுக்களாகும்.

உ-ம் :—சென்றன.
வாரா.

3. எச்சம்

பெயரெச்சம்

படித்த பள்ளிக்கூடம். இத்தொடரிலுள்ள படித்த என்னும் பொருள் முற்றுப் பெறாத ஒரு வினைச்சொல்

பள்ளிக்கூடம் என்னும் ஒரு பெயரைக் கொண்டு முடிந்திருக்கிறது. இவ்வாறு ஒரு பெயரைக்கொண்டு முடிகின்ற, பொருள் முற்றுப்பெருத வினைச் சொல் பெயரெச்சம் என்று கூறப்படும்.

### வினையெச்சம்

நடந்து வந்தான். இத்தொடரிலுள்ள நடந்து என்னும் முற்றுப் பெருத வினைச்சொல், வந்தான் என்னும் ஒரு வினையைக் கொண்டு முடிந்திருக்கிறது. இவ்வாறு ஒரு வினையைக் கொண்டு முடிகின்ற முற்றுப்பெருத வினைச்சொல் வினையெச்சம் என்று கூறப்படும்.

எனவே பெயரெச்சம், வினையெச்சம் என எச்சம் இருவகைப்படும். அவற்றில் பெயரைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம்; வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம்.

### பயிற்சி

கீழ்வரும் தொடர்களிலுள்ள வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சங்களை எடுத்தெழுது:—

1. பாடிப் பரிசு பெற்ருன்.
2. வந்த விருந்தினரை உபசரித்தான்.
3. நிலத்தை உழுது நெல் விளைவித்தான்.
4. விளையாடுவதற்கு ஓடி வருகின்ருன்.
5. உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு.

## IV எழுத்து

1. (a) உயிரெழுத்து

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்து எனப்படும்.

இது உடம்பின் (மெய்) உதவியின்றித் தானே தனித்து நடக்கும் தன்மை உடைமையால் உயிரெழுத்து எனப் பெயர் பெற்றது.

(b) மெய்யெழுத்து

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ள், ழ், ற், ன் என்ற இப்பதினெட்டு எழுத்துக்களும் மெய் யெழுத்து எனப் பெயர் பெறும்.

இப்பதினெட்டும் உயிரின் உதவி இன்றித் தனியே நடக்காத உடம்பு (மெய்) போல உயிர் எழுத்தின் உதவி இன்றித் தனியே நடக்காததால் மெய் யெழுத்து எனப் பெயர் பெறும்.

(c) உயிர்மெய் யெழுத்து

மேலே கூறிய பன்னிரெண்டு உயிரெழுத்துக் களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களும் சேர்ந்து வருவதால் உண்டாகின்ற இருநூற்றுப் பதினாறு (216) எழுத்துக்களும் உயிர்மெய்யெழுத்துக்கள் ஆகும்.

உ-ம்:—க்+அ=க. ச்+எ=செ. த்+ஊ=தூ

ம்+ஒ=மொ. ச்+ஐ=சை. ப்+ஔ=பௌ.

(d) ஆய்த எழுத்து

அடுப்புக் கூட்டியதுபோல மூன்று புள்ளி வடிவமாக (ஃ) உள்ள எழுத்து ஆய்த எழுத்து ஆகும்.

இது குற்றெழுத்திற்கும் உயிர்மெய் வல்லெழுத்திற்கும் நடுவில் வரும்.

உ-ம்:—அஃது, இஃது, எஃகு.

2. உச்சரிப்பு

ர, ற, ல, ள, ழ, ந, ன, ண இவற்றை உச்சரிக்க வேண்டிய முறைகள்.

## ர



இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனி, மேல் வாய் முன் பல்லின் உட்புற அடிப்பாகத்தைத் தடவும்.

## ற



இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனி வாயின் மேல்பாகத்தின் முன்புறத்தை அழுத்தமாகத் தடவும்.

## ல



இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனி, சிறிது மடங்கி, மேல் வாய் முன் பல்லைத் தடவும்.




இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனி விரிந்து மடங்கி மேல் வாயைத் தடவும்.




இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனி விரிந்து நன்கு மடங்கி, இரு விளிம்புகளும் கடைவாய்ப் பற்களைத் தடவும்.




இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனியானது மேல் வாய் முன் பல்லின் உட்புறத்தின் அடிப் பாகத்தைத் தடவும்.

ன



இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனி மேல் வாய் முன் பல்லின் உட்புறத்தைச் சிறிது அழுத்தமாகத் தடவும்.

ண



இவ்வெழுத்தை உச்சரிக்கும் போது நாக்கின் நுனி விரிந்து மடங்கி, மேல் வாயைத் தடவும்.

3. உயிரெழுத்துவகை

(a) குறில் நெடில் :—

அது, ஆடு, இச் சொற்களில் அது என்பதிலுள்ள அ என்னும் எழுத்து, குறைந்த ஓசை உள்ளதாகக் காணப்படுகிறது. ஆடு என்பதிலுள்ள ஆ என்னும் எழுத்து நீண்ட ஓசை உள்ளதாகக் காணப்படுகிறது. இவ்வாறு குறைந்த ஓசையை உடைய உயிரெழுத்துக்கள் குற்றெழுத்துக்கள் என்றும் நீண்ட ஓசையை உடைய உயிரெழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் என்றும் கூறப்படும்.

அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தும் குற்றெழுத்துக்களாம். இவை குறில் என்றும் சொல்லப்படும்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற ஏழும் நெட்டெழுத்துக்களாம். இவை நெடில் என்றும் கூறப்படும்.

(b) சுட்டு :—

அவன், அம்மனிதன், இவன், இவ்வீடு. இச்சொற்களிலுள்ள அ, இ, என்ற எழுத்துக்கள் ஒரு பொருளைக் குறித்துக் காட்டுகின்றன. இவ்வாறு ஒரு பொருளைக் குறித்துக் காட்டும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்கள் என்று கூறப்படும். (சுட்டுதல்—குறித்துக் காட்டுதல்.)

அ, இ, உ என்ற மூன்றும் சுட்டெழுத்து என்று கூறப்படும்.

(c) வினா :—

எவன், யாவன், எக்குதிரை. இச்சொற்களிலுள்ள எ, யா, என்ற எழுத்துக்கள் கேள்வி கேட்கும் பொருளில் வருகின்றன. இவ்வாறு கேள்வி கேட்கும் பொருளில் வரும் எழுத்துக்கள் வினா எழுத்துக்கள் என்று கூறப்படும்.

ஆ, எ, ஏ, ஓ, யா இவ்வைந்தும் வினா எழுத்துக்களாம். (வினா = கேள்வி.)

பயிற்சி

கீழ்வரும் சொற்களிலுள்ள குறில், நெடில், சுட்டு, வினா எழுத்துக்களை எடுத்தெழுது :—

அணில், ஊக்கம், யாவன், அம்மி, ஆடை, அது, உடை, இலை, இது, யார், யானை, யாவர், எருது, எவர், ஒன்று.

4. மெய்யெழுத்து வகை.

கொக்கு, மனம், விரல்.

இச்சொற்களில் கொக்கு என்பது வன்மையான ஓசையை உடையது.

மனம் என்பது மென்மையான ஓசையை உடையது.

விரல் என்பது வன்மையும் மென்மையும் அல்லாத நடுத்தரமான ஓசையை உடையது.

இவ்வாறு வன்மையான ஓசையை உடைய எழுத்துக்கள் வல்லினம் அல்லது வல்லெழுத்துக்கள் என்றும், மென்மையான ஓசையை உடைய எழுத்துக்கள் மெல்லினம் அல்லது மெல்லெழுத்துக்கள் என்றும் வன்மையும் மென்மையுமல்லாத நடுத்தரமான ஓசையை உடைய எழுத்துக்கள் இடையினம் அல்லது இடையெழுத்துக்கள் என்றும் கூறப்படும்.

க், ச், ட், த், ப், ற் இவை வல்லெழுத்துக்கள்.
ங், ஞ், ண், ந், ம், ன் இவை மெல்லெழுத்துக்கள்.
ய், ர், ல், வ், ள், ழ் இவை இடையெழுத்துக்கள்.

பயிற்சி

கீழ்வரும் சொற்களிலுள்ள வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களைக் கண்டுபிடி :—

பஞ்சு, மார்பு, தூக்கம், மரம், கன்று, சுக்கு, தேய்த்தல், காய்ச்சினன், படித்தான்.

5. உயிர்மெய் யெழுத்து வகை

உயிர்மெய் யெழுத்துக்கள், உயிர்மெய்க் குற்றெழுத்து, உயிர்மெய் நெட்டெழுத்து, உயிர்மெய்

வல்லெழுத்து, உயிர்மெய் மெல்லெழுத்து, உயிர்மெய் இடையெழுத்து என ஐந்து வகைப்படும்.

| | | |
|---|---|---|
| உயிர்க் குற்றெழுத்து 5 × மெய் 18 = உயிர்மெய்க் குற்றெழுத்து | } | 90 |
| உயிர் நெட்டெழுத்து 7 × மெய் 18 = உயிர்மெய் நெட்டெழுத்து | } | 126 |
| ஆக உயிர்மெய் யெழுத்துக்கள் | = | 216 |
| வல்லெழுத்து 6 × உயிர் 12 = உயிர்மெய் வல்லெழுத்து | } | 72 |
| மெல்லெழுத்து 6 × உயிர் 12 = உயிர்மெய் மெல்லெழுத்து | } | 72 |
| இடையெழுத்து 6 × உயிர் 12 = உயிர்மெய் இடையெழுத்து | } | 72 |
| ஆக உயிர்மெய் யெழுத்துக்கள் | = | 216 |

6. ர, ற, ல, ள, ழ, ந, ன, ண எழுத்துக்கள் வரும் போது தோன்றும் பொருள் வேற்றுமை.

(a) ரகர, றகரங்கள்

மரம், மறம். இவற்றிலுள்ள ரகரமும் றகரமும் ஓசையில் சிறிது வேறுபாடு உடையவை. இச்சொற் களின் பொருளில் வேறுபாடு இருப்பதைக் கவனி.

ரகரத்தைக் குறித்துச் சொல்லும்போது இடை யின ரகரம் என்றும் றகரத்தைக் குறித்துச் சொல்லும் போது வல்லின றகரம் என்றும் சொல்லவேண்டும்.

பயிற்சி

கீழ்வரும் உதாரணங்களிலிருந்து பொருள் வேறுபாட்டைக் கண்டுபிடி :—

| | | |
|---|---|---|
| அரம் | — | அறம் |
| கரி | — | கறி |
| உரை | — | உறை |
| உரி | — | உறி |
| அரிவாள் | — | அறிவாள் |
| எரி | — | எறி |
| பரவை | — | பறவை |

**(b) லகர, ளகர, ழகரங்கள்**

வால், வாள், வாழ். இவற்றிலுள்ள ல், ள், ழ், இம் மூன்றும் ஓசையிலும் பொருளிலும் வேறுபட்டே வரும். இவற்றுள், ளகரம் எல்லா மொழிகளுக்கும் பொதுவாக உள்ள எழுத்தாகையால் பொது ளகர மென்றும், ழகரம் தமிழ் மொழிக்கு மட்டும் உரிய எழுத்தாகையால் சிறப்பு ழகர மென்றும் கூறுவார்கள்.

பயிற்சி

கீழ்வரும் உதாரணங்களிலிருந்து பொருள் வேறுபாட்டைக் கண்டுபிடி :—

| | | | | |
|---|---|---|---|---|
| அலி | — | அளி | — | அழி |
| கலை | — | களை | — | கழை |
| வலி | — | வளி | — | வழி |
| தாலி | — | தாளி | — | தாழி |

**(c) நகர, னகர, ணகரங்கள்**

மனம், மணம். இவற்றிலுள்ள ன, ண இரண்டும் ஓசையிலும் பொருளிலும் வேறுபட்டிருப்பதைக்

காணலாம். ந, இது த என்னும் எழுத்தைக் அடுத்து வருவதால் தந்நகரம் என்றும், ன இது றகரத்தை அடுத்து வருவதால் றன்னகரம் என்றும், ண, இது டகரத்தை அடுத்து வருவதால் டண்ணகரம் என்றும் கூறப்படும்.

பயிற்சி

கீழ்க்கண்ட உதாரணங்களிலிருந்து பொருள் வேறுபாட்டைக் கண்டுபிடி :—

| | | |
|---|---|---|
| தினை | — | திணை |
| கன்னி | — | கண்ணி |
| ஊன் | — | ஊண் |
| ஆனி | — | ஆணி |
| வானம் | — | வாணம் |

கந்தன், கன்று, கண்டான். இச்சொற்களிலுள்ள ந், ன், ண் இம்மூன்றிற்குமுள்ள வேறுபாட்டை உச்சரித்து அறிந்து கொள்க.

## V புணர்ச்சி

நெல் விளைந்தது

இத்தொடரில் இரண்டு சொற்கள் இருப்பதைக் காணலாம். இவற்றில் நெல் என்பது முன்னால் நிற்கும் மொழி ஆகையால், அது நிலைமொழி என்று கூறப்படும். விளைந்தது என்பது, நிலைமொழியோடு சேருவதற்கு வரும் மொழி, ஆகையால் அது வருமொழி என்று கூறப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கல் | + | எறிந்தான் | = | கல்லெறிந்தான் |
| பந்து | + | அடித்தான் | = | பந்தடித்தான் |
| வாழை | + | பழம் | = | வாழைப்பழம் |

இத்தொடர்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நிலை மொழியும் ஒரு வருமொழியும் சேர்ந்து வருவதைப் பார்க்கலாம். இவ்வாறு நிலைமொழியும் வருமொழியும் சேர்ந்து வருவதற்குப் புணர்ச்சி என்று பெயர்.

### 1. (a) சுட்டெழுத்துக்கு முன் மிகுதல்

அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்களுக்கு முன் உயிரெழுத்துக்களும் யகரமும் அல்லாத, மற்ற எழுத்துக்கள் வந்தால் வந்த எழுத்துக்கள் மிகும்.

உ-ம் :—

| | | | |
|---|---|---|---|
| அ + கன்று | = | அக்கன்று | வல்லினம் |
| இ + குதிரை | = | இக்குதிரை | |
| அ + மனிதன் | = | அம்மனிதன் | மெல்லினம் |
| இ + மனிதன் | = | இம்மனிதன் | |
| இ + நகர் | = | இந்நகர் | |
| அ + வண்டு | = | அவ்வண்டு | இடையினம் |
| இ + வீடு | = | இவ்வீடு | |

### 2. இரண்டாம் வேற்றுமை விரியிலும் நான்காம் வேற்றுமை விரியிலும் மிகுதல்

இரண்டாம் வேற்றுமை விரியிலும் நான்காம் வேற்றுமை விரியிலும் வருமொழியில் வல்லினம் வந்தால் வந்த எழுத்து மிகும்.

உ-ம் :—பாலை + குடித்தான் = பாலைக்குடித்தான்.
காக்கையை + பார் = காக்கையைப் பார்.
இராமனுக்கு + தந்தை = இராமனுக்குத் தந்தை.
எனக்கு + கொடுத்தான் = எனக்குக் கொடுத்தான்.

வேற்றுமை விரியாவது, நிலைமொழிக்கும் வருமொழிக்குமிடையில் வேற்றுமையுருபு வெளிப்பட்டு வருவது, மறைந்து வருவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

## 3. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி இச்சொற்களுக்குப் பின் மிகுதல்

அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி இச்சொற்களுக்குப் பின் வருமொழியில் வல்லினம் வந்தால் வந்த எழுத்து மிகும்.

உ - ம் :—அந்த + பையன் = அந்தப் பையன்.
இந்த + குதிரை = இந்தக் குதிரை.
எந்த + பலகை = எந்தப் பலகை.
அப்படி + செய்தான் = அப்படிச் செய்தான்.
இப்படி + பேசினுன் = இப்படிப் பேசினுன்.
எப்படி + பாடினரோ = எப்படிப் பாடினரோ.

1. உடம்படுமெய்

உ - ம் :—மணி + அடித்தான் = மணியடித்தான்
ஈ + இருந்தது = ஈயிருந்தது.
அணை + உடைந்தது = அணையுடைந்தது.

இவற்றில், நிலைமொழியின் கடைசி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் உயிரெழுத்துக்கள். இவ்வாறு நிலைமொழியின் கடைசியில் இ, ஈ, ஐ என்ற உயிர் எழுத்துக்களுள் ஏதேனும் ஒன்று இருந்து, வருமொழி முதலில் எந்த உயிரெழுத்து வந்தாலும், அவ்விரண்டும் புணரும்போது ய் என்றமெய் யெழுத்துத் தோன்றும். அவ்வாறு தோன்றுவது யகர உடம்படுமெய் எனப்படும்.

உ - ம் :—பல + இடம் = பலவிடம்.
பலா + இலை = பலாவிலை.
நடு + எழுத்து = நடுவெழுத்து.
பூ + உதிர்ந்தது = பூவுதிர்ந்தது.
கோ + இல் = கோவில்.

இச்சொற்களின் கடைசியில் அ, ஆ, உ, ஊ, ஓ, ஓ ஔ என்னும் உயிர் எழுத்துக்கள் இருந்து, அவற்றின் முன் வருமொழி முதலில் உயிர் வரும்போது, வ் என்ற உடம்படு மெய் தோன்றியது. இது வகர உடம்படு மெய் என்று கூறப்படும்.

உ-ம் :—சே + அடி = சேவடி.

குலத்தளவே + ஆகும் = குளத்தளவேயாகும்.

இச்சொற்களில், நிலைமொழியின் கடைசியில் ஏ என்னும் உயிரெழுத்து இருந்து, வருமொழி முதலில் உயிர் வரும்போது வ், ய் என்ற இரண்டு உடம்படு மெய்களும் தோன்றி இருக்கின்றன.

உடம்படுமெய் என்பது நிலைமொழியின் கடைசியிலும் வருமொழி முதலிலுமுள்ள உயிர்களை ஒன்று சேர்க்கும் மெய் எழுத்தாகும்.

பயிற்சி

கீழ்வரும் சொற்களைச் சேர்த்து எழுது :—

பனை + ஓலை, மறு + உலகம், பசி + அதிகம், கணு + உண்டு, கை + ஊன்றி, வளி + இல்லை, அவனே + இவன்.

2. குற்றியலுகரப் புணர்ச்சி

குற்றியலுகரத்திற்கு முன் உயிர் வந்தால் குற்றியலுகரம், தான் ஏறி நின்ற மெய்யை விட்டுக்கெடும். வந்த உயிர் நின்ற மெய்யெழுத்தோடு சேரும்.

உ-ம் :—விறகு + உடைத்தான் = விறகுடைத்தான்.

பாட்டு + எழுதினன் = பாட்டெழுதினன்.

குற்றியலுகரத்திற்கு முன் யகரம் வந்தால் உ, இ ஆகத் திரியும்.

உ-ம் :—பெறுவது + யாது = பெறுவதியாது.

3. அ, இ, எ முன் உயிரும் யகரமும் வரப் புணர்தல்

அ, இ என்ற சுட்டெழுத்துக்களுக்கு முன்னும் எ என்ற வினு எழுத்துக்கு முன்னும் வருமொழியில் உயிரும் யகரமும் வந்தால் இடையில் வ் என்ற எழுத்துத் தோன்றும்.

உ-ம் :—அ + உயிர் = அவ்வுயிர்.
இ + உயிர் = இவ்வுயிர்.
அ + யானை = அவ்யானை.
இ + யுகம் = இவ்யுகம்.
எ + அணில் = எவ்வணில்.
எ + யானை = எவ்யானை.

பயிற்சி

கீழ்வரும் சொற்களைச் சேர்த்து எழுது:—

அம்பு + எய்தான், இ + உடம்பு, அ + ஓணன், சங்கு + ஊதினுன், காற்று + அடித்தது, எ + உயிர்.

4. மெய் முன் உயிர் புணர்தல்

உ - ம் :—நகர் + அழகு = நகரழகு.
பால் + ஊற்றினுன் = பாலூற்றினுன்.

இத்தொடர்களில் நிலைமொழியின் கடைசியில் ர், ல் என்ற மெய்யெழுத்துக்கள் இருக்கின்றன. வருமொழி முதலில் உயிர் எழுத்துக்கள் இருக்கின்றன. இவ்விரண்டும் சேரும்போது, நிலைமொழியின் கடைசியிலுள்ள மெய்யெழுத்தோடு வருமொழி, முதலிலுள்ள உயிரெழுத்து சேர்ந்து இவ்விரண்டும் ஓர் உயிர்மெய் யெழுத்தாகி வரும். இவ்வாறு சேர்த்து எழுதுவது தமிழில் முறையாகும்.

5. திரிதல்

ம், ல், ள், ன், ண் என்பவை க, ச, த, ப, வரின் திரிதல்.

ம் என்னும் எழுத்து நிலைமொழியின் கடைசியில் இருந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் உயிர் மெய்யெழுத்துக்கள் வந்தால், வந்த எழுத்திற்கு இனமாகத் திரியும்.

உ-ம்:—மரம் +காய்த்தது = மரங்காய்த்தது.
அறம்+செய்தான் = அறஞ்செய்தான்.
சரம் +தொடுத்தான் = சரந்தொடுத்தான்.

ல் என்னும் எழுத்து நிலைமொழியின் கடைசியில் இருந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் உயிர் மெய்யெழுத்துக்கள் வந்தால், ற் என்னும் எழுத்தாகத் திரியும்.

உ-ம்:—சொல்+குற்றம்=சொற்குற்றம்.
பால் +சோறு=பாற்சோறு.
கல் +தூண் =கற்றூண்.
பல் +பொடி =பற்பொடி.

ள் என்னும் எழுத்து நிலைமொழியின் கடைசியில் இருந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் உயிர் மெய்யெழுத்துக்கள் வந்தால் ட் என்ற எழுத்தாகத் திரியும்.

உ-ம் :—முள் +காடு =முட்காடு.
முள் +செடி =முட்செடி.
வாள்+படை =வாட்படை.

ன் என்னும் எழுத்து நிலைமொழியின் கடைசியில் இருந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் உயிர் மெய்யெழுத்துக்கள் வந்தால், ற் என்னும் எழுத்தாகத் திரியும்.

உ-ம் :—பொன் + குடம் = பொற்குடம்.
பொன் + தகடு = பொற்றகடு.
தன் + பெருமை = தற்பெருமை.

ண் என்னும் எழுத்து நிலைமொழியின் கடைசியில் இருந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்னும் உயிர் மெய்யெழுத்துக்கள் வந்தால், ட் என்னும் எழுத்தாகத் திரியும்.

உ-ம் :—மண் + குடம் = மட்குடம்.
கண் + செவி = கட்செவி.
கண் + புலன் = கட்புலன்.

## II மொழிப் பயிற்சி

### I சொற்றொடர்

மனிதன் மரத்தை வெட்டினன்.

இத் தொடரில் மனிதன் என்னும் எழுவாயும் வெட்டினன் என்னும் பயனிலையும் மரத்தை என்னும் செயப்படுபொருளும் வந்திருப்பதைக் காணலாம்.

வேலன் சென்றான்.

இத் தொடரில் வேலன் என்னும் எழுவாயும், சென்றான் என்னும் பயனிலையும் மட்டுமே வந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் மூன்றும் சேர்ந்தும் அல்லது எழுவாய் பயனிலை மட்டும் சேர்ந்தும் ஒரு முற்றுப் பெற்ற கருத்தைத் தெரிவிப்பது சொற்றொடர் அல்லது வாக்கியம் என்று கூறப்படும்.

1. தனி வாக்கியம்.

சீதை பாடினுள்.

இதில் சீதை என்னும், எழுவாயும், பாடினுள் என்னும் பயனிலேயும் வந்துள்ளன.

முருகன் வள்ளியை மணந்தான்.

இதில் முருகன் என்னும் எழுவாயும், மணந்தான் என்னும் பயனிலேயும், வள்ளியை என்னும் செயப்படு பொருளும் வந்துள்ளன.

இவ்வாறு எழுவாயும் பயனிலேயும் மட்டும் வந்தாலும் எழுவாய் பயனிலே செயப்படு பொருள் மூன்றும் சேர்ந்து வந்தாலும் தனி வாக்கியம் என்று கூறப் படும்.

2. தொடர் வாக்கியம்

நான் ஊருக்குப் புறப்பட்டேன்; ஆனுல் வண்டி கிடைக்கவில்லே.

இதில் இரண்டு வாக்கியங்கள் ஒன்ருேடொன்று தொடர்ந்து நிற்பதைக் காணலாம்.

கண்ணனும் வேலனும் பந்தாடச் சென்ருர்கள்.

இதில், இரண்டு எழுவாய்கள் ஒரு பயனிலே யைக் கொண்டு முடிந்திருப்பதைக் காணலாம்.

வேடன் காட்டிற்குச் சென்று, வேட்டையாடி வீட்டிற்குத் திரும்பினுன்.

இங்கு ஒரே எழுவாய் மூன்று பயனிலேகளேக் கொண்டு முடிந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு இரண்டு சொற்ரெடர்கள் ஒன்ரே டொன்று தொடர்ந்து நின்ருலும், இரண்டு முதலிய எழுவாய்கள் ஒரே பயனிலையைக் கொண்டு முடிந் தாலும், ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிந்தாலும் தொடர் வாக்கியம் என்று கூறப்படும்.

3. கலவை வாக்கியம்

திருவள்ளுவர் உலகத்தாரைப் பார்த்து, "பிறர் நமக்குத் தீமை செய்தாலும் நாம் அவர்களுக்கு நன் மையே செய்ய வேண்டும்," என்று கூறியுள்ளார்.

இங்கு "திருவள்ளுவர் உலகத்தாரைப் பார்த் துக் கூறியுள்ளார்," என்பது முதல் வாக்கியம். "பிறர் நமக்குத் தீமை செய்தாலும் நாம் அவர்களுக்கு நன்மையே செய்யவேண்டும்,' என்பது துணை வாக்கியம். "என்று," என்பது இடையில் வரும் சொல்.

இவ்வாறு ஒரு முதல் வாக்கியமும் ஒரு துணை வாக்கியமும் கலந்துவந்து, இந்த இரண்டு வாக்கி யங்களும் சேரும்போது இடையில் என, என்று, ஆக முதலிய சொற்களில் ஏதேனும் ஒன்றைப் பெற்று வருவது கலவை வாக்கியம் என்று கூறப்படும்.

## II சொற்ரெடர்களில் உறுப்புக்கள் நிற்குமுறை

கண்ணன் மாடுகளை மேய்த்தான். இத்தொடரில் கண்ணன் என்னும் எழுவாய் முதலிலும், மாடுகளை என்னும் செயப்படுபொருள் இடையிலும் மேய்த்தான் என்னும் பயனிலை கடைசியிலும் வந்திருப்பதைக் காணலாம்.

எனவே, எழுவாய் ஒரு சொற்றொடரின் முதலிலும், செயப்படுபொருள் இடையிலும், பயனிலை கடைசியிலும் வரும். இவ்வாறு வருவதே தமிழ் முறை.

பயிற்சி

கீழ்க்கண்ட சொற்களைப் பொருத்தமான வேற்றுமைகளைச் சேர்த்துத் தொடர்களாக அமைக்கவும்:—

| | | |
|---|---|---|
| வேண்டும் | காந்தி | எலி |
| வணக்கம் | பெண்கள் | பூனை |
| முதலியோர் | வேண்டும் | சிறந்த |
| இராமன் | பிதா | மீட்டான் |
| தமிழ்நாடு | நலன் | சுப்பிரமணிய பாரதி |
| பிறந்த | நூல் | கொன்று |
| மகாத்மா | மாதா | பொறித்தது |
| கவிஞர் | குரு | தாகூர் |
| கொன்று | செய்ய | வீடு |
| கோழி | இராவணன் | தாழ்த்தப்பட்டோர் |
| தின்றது | சீதை | வேளை |
| முட்டை | பிறந்த | அரசர் |
| இட்டு | வடநாடு | ஒழிந்த |
| குஞ்சு | ஒரு | பாடுபட்டார் |
| ஒரு | கவிஞர் | நூற்க |
| சிறந்த | பிறந்த | தெய்வம் |

## III வாக்கியப் பொருத்தம்

### 1. எழுவாய் வினைமுற்றுக்களின் பொருத்தம்

தன்மை இடத்திற்குரிய எழுவாய், தன்மை வினைமுற்றைப் பயனிலையாகக் கொண்டு முடியும்.

உ-ம்:—நான் வந்தேன்.
யாம் வந்தோம்.

இவற்றில், நான், யாம் என்னும் தன்மை எழுவாய்கள், வந்தேன், வந்தோம் என்னும் தன்மை வினை முற்றுக்களைப் பயனிலையாகக் கொண்டு முடிந்திருப்பதைக் காணலாம்.

முன்னிலை இடத்திற்குரிய எழுவாய், முன்னிலை வினைமுற்றைப் பயனிலையாகக் கொண்டு முடியும்.

உ-ம் :—நீ படித்தாய்.
நீங்கள் படித்தீர்கள்.

இவற்றில் நீ, நீங்கள் என்னும் முன்னிலை எழுவாய்கள் படித்தாய், படித்தீர்கள் என்ற முன்னிலை வினைமுற்றுக்களைப் பயனிலையாகக் கொண்டு முடிந்திருப்பதைக் காணலாம்.

படர்க்கை இடத்திற்குரிய எழுவாய், படர்க்கை வினைமுற்றைப் பயனிலையாகக் கொண்டு முடியும்.

உ-ம் :—அவன் படித்தான்.
சீதை பாடினாள்.
அவர்கள் வந்தார்கள்.

இவற்றில் அவன், சீதை, அவர்கள் என்னும் படர்க்கை எழுவாய்கள், படித்தான், பாடினாள், வந்தார்கள் என்னும் படர்க்கை வினைமுற்றுக்களைப் பயனிலையாகக் கொண்டு முடிந்திருப்பதைக் காணலாம்.

### 2. தன்மை முன்னிலை கலந்து வருதல்

தன்மைப் பெயரும், முன்னிலைப் பெயரும் கலந்து வரும்போது அம், ஆம் என்னும் விகுதிகளையுடைய தன்மை வினையைப் பயனிலையாகக் கொண்டு முடியும்.

உ - ம் :—யானும் நீயும் விளையாடுவம்.
நீயும் யானும் செல்வாம்.

3 தன்மை முன்னிலை படர்க்கை கலந்து வருதல்

தன்மை முன்னிலை படர்க்கைப் பெயர்கள் சேர்ந்து வரும்போது கும், டும், தும், றும் என்னும் விகுதிகளையுடைய தன்மைப் பன்மைப் பயனிலையைக் கொண்டு முடியும்.

உ - ம் :-யானும் நீயும் அவனும் செய்கும். (செய்வோம்)
நீயும் அவனும் யானும் உண்டும். (உண்டோம்)
அவனும் நீயும் யானும் வருதும். (வருவோம்)
நீயும் யானும் அவனும் சென்றும். (சென்றோம்)

மேலே கூறப்பட்ட கும், டும், தும், றும் என்னும் விகுதிகளையுடைய வினைமுற்றுக்கள் செய்யுளில் மட்டும் வரும். உலக வழக்கில் ஓம் என்னும் விகுதியே எல்லாத் தன்மைப் பன்மைக்கும் வந்து வழங்கக் காண்கிறோம்.

## IV இடம் விட்டு எழுதுதல்

நாம் ஒரு செய்தியை எழுதத் தொடங்கும்போது, இடதுகைப் பக்கத்தில் சிறிது இடம் விட்டு எழுதத் தொடங்க வேண்டும். மேல் பாகத்திலும் சிறிது இடம் விடவேண்டும். சொற்கள் தொடர்ந்து வரும்போது, பிறருக்கு நன்றாகப் பொருள் விளங்கும்படி போதுமான இடம் விட்டு எழுதவேண்டும். மேலும், நிறுத்தக்குறிகளாகிய காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற் புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோட்குறி, உணர்ச்சிக் குறி, வினாக் குறி இவற்றை இடும்போதும் இடம்

விட்டு எழுதுதல் வேண்டும். இவற்றைப் புத்தகங் களைப் படிக்கும்போது கவனித்து அறிந்து கொள் ளவும்.

## V சேர்த்தெழுதுதல்

அவன் + இடம் = அவனிடம்

கால் + ஒடிந்தது = காலொடிந்தது

இவ்விடங்களில் நிலைமொழியையும் வருமொழி யையும் சேர்த்து எழுதினாலும், பொருள் நன்றாக விளங்குவதால் அவற்றைச் சேர்த்து எழுத வேண்டு வதே முறையாகும். இவற்றைப் பிரித்து எழுதுவது தவறு.

## VI சொற்பொருத்தம்

நிலைமொழியையும் வருமொழியையும் சேர்த்து எழுதும்போது, சொற்பொருத்தம் உண்டாகும்படி எழுதவேண்டும். இதுவே சொற்பொருத்தம் எனப் படும்.

உ-ம் :—

தீயாற் சுடு. நீரால் நனை.

இவ்வாறு எழுதுவதே முறை. இவ்வாறின்றி தீயால் நனை, நீரால் சுடு என்று மாற்றி எழுதுவது தவறு. அவ்வாறு எழுதினால் சொற்பொருத்தம் இன்றிக் கேட்போருக்கும் பொருள் விளங்காமற் போகும்.

இனி மற்றொரு வகைச் சொற்பொருத்தமு முண்டு. அதனைக் கீழே காண்க.

முருகா! சந்தனம் அரை.

இது என் அறை.

இத்தொடர்களில் அரை, அறை என்ற இருசொற்கள் இருப்பதைக் காணலாம். இவை இரண்டும் ஒன்று போலவே தோன்றுகின்றன. ஆயினும் முதல் தொடரில் அரை என்ற சொல்லையும் இரண்டாம் தொடரில் அறை என்ற சொல்லையும் அமைப்பதே பொருத்தமாகும். இவ்வாறு அமைக்காமல் மாற்றி அமைத்தால் சொற் பொருத்தமின்றிப் பொருளும் மாறுபடும். ஆதலால் இவ்வாறு சொற்களை இடத்திற்கு ஏற்றபடி அமைப்பதே சொற்பொருத்தமாகும்.

## VII நிறுத்தக் குறிகள்

நாம் ஒன்றை வாசிக்கும்போது நமக்கும் கேட்போருக்கும் நன்ருகப் பொருள் விளங்கும்படி நிறுத்தி வாசிக்க வேண்டும். அவ்வாறு நிறுத்தி வாசிக்க வேண்டிய இடங்களைத் தெரிந்துகொள்வதற்காகச் சில குறிகள் போடப்படும்; அக்குறிகளே நிறுத்தக் குறிகள் என்று கூறப்படும்.

### 1. முற்றுப் புள்ளி

(.) இதற்கு முற்றுப்புள்ளி என்று பெயர். ஒவ்வொரு தொடரின் முடிவிலும் இக்குறியைப் போட வேண்டும். வாசிக்கும்போது இக்குறியுள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

உ - ம் :—நான் சென்னைக்குச் சென்றேன்.
எனது நண்பர்கள் என்னை வரவேற்ருர்கள்.

### 2. அரைப் புள்ளி

(;) இதற்கு அரைப்புள்ளி என்று பெயர். ஒரே பொருளைப்பற்றிய தொடர்கள் அடுத்தடுத்து வரும்

போது இக்குறி போடப்படும். அவ்விடங்களில் இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும்.

உ-ம்:—அனுமான் இலங்கைக்குச் சென்ருன்; இராவணனைக் கண்டான்; சில வார்த்தைகள் கூறித் திரும்பினுன்.

3. காற்புள்ளி

(,) இதற்குக் காற்புள்ளி என்று பெயர். ஒரு தொடரில் வரும் பல பொருள்களையும் பிரித்துக் காட்டுவதற்கு இக்குறி போடப்படும். இக்குறியுள்ள இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தி வாசிக்க வேண்டும்.

உ-ம்:—முருகன் கடைக்குச் சென்று காய், கறி, கிழங்கு வாங்கி வந்தான்.

4. விஞக் குறி

(?) இதற்கு விஞக்குறி என்று பெயர். ஒரு தொடர் விஞப்பொருளில் வரும்போது இக்குறி போடப்படும். இக்குறியுள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவும்.

உ-ம்:—நீ இன்று பாடம் படித்தாயா?

5. உணர்ச்சிக் குறி

(!) இதற்கு உணர்ச்சிக்குறி என்று பெயர். பயம், வியப்பு முதலிய உணர்ச்சிகளைக் குறிக்கும் தொடரின் கடைசியில் இக்குறி போடப்படும். இக்குறி உள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

உ-ம்:—ஐயோ! புலி வருகிறது! இவ்வீடு என்ன அழகாக இருக்கிறது!

6. மேற்கோள் குறி

(“ ”)இதற்கு மேற்கோள் குறி என்று பெயர். ஒருவர் கூறிய தொடரை அப்படியே எடுத்துச் சொல்லுமிடத்து அத்தொடரின் முதலிலும் கடைசி யிலும் இக்குறி போடவேண்டும்.

உ-ம்:—ஔவையார் “முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்” என்று கூறினர்.

பயிற்சி

கீழ்வரும் தொடர்களுக்கு என்ன குறி இடவேண்டு மென்பதைக் கண்டுபிடித்து எழுது:—

1. கரும்பின் சுவை கழுதைக்குத் தெரியுமா
2. கடைக்குச் சென்று வெற்றிலை பாக்கு தேங்காய் பழம் வாங்கி வா
3. இப்பழம் என்ன சுவையாக இருக்கின்றது
4. பெரியோர் உண்மை உயர்வு தரும் என்று கூறுவர்.
5. நான் பள்ளிக்குச் சென்றேன் ஆசிரியர் கற்பித்த பாடங்களைக் கவனித்தேன் பிறகு வீடு திரும்பினேன்
6. திருக்குறள் சிறந்த நூல் இதை இயற்றியவர் திருவள்ளுவர் அவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர்

# VIII வாக்கிய மாற்றம்

## தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக மாற்றுதல்

இராமன் இலங்கைக்குச் சென்றான்; இராவணனை வென்றான்; சீதையைச் சிறைமீட்டான்.

இத்தொடர்கள் ஒவ்வொன்றிலும் எழுவாய் பயனிலை இருப்பதால் தனி வாக்கியம் என்று கூறப்படும்.

இவற்றைத் தொடர் வாக்கியமாக மாற்றும்பொழுது. "இராமன் இலங்கைக்குச் சென்று இராவணனை வென்று சீதையைச் சிறைமீட்டான்." என்று ஒரே தொடராக முடிக்கலாம்.

தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியமாக மாற்றுதல்

நாங்கள் குற்ருலத்திற்குச் சென்று அருவியில் நீராடி ஊருக்குத் திரும்பினேம்.

இவ்வாக்கியம் ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிவதால் தொடர் வாக்கியம் எனப்படும். இதைத் தனி வாக்கியமாக மாற்றும் பொழுது, "நாங்கள் குற்ருலத்திற்குச்சென்ருேம்; அருவியில் நீராடினேம்; ஊருக்குத் திரும்பினேம்," என்று தனித்தனி வாக்கியங்களாக முடிக்க வேண்டும்.

பயிற்சி

கீழ்க்கண்ட வாக்கியங்களிலுள்ள தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாகவும் தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாவும் மாற்று:—

1. மாணவர்கள் பள்ளிக்கூடம் சென்று பாடங்களைப் படித்து மாலையில் வீட்டிற்குத் திரும்புவர்.

2. நந்தனர் சிதம்பரம் சென்ருர். கடவுளை வழிபட்டார். முக்தியை அடைந்தார்.

3. நான் நன்ருகப் படிக்காததால் பரீட்சையில் தேறவில்லை.

4. நான் சென்னைக்குப் புறப்பட்டேன். ஆனல் வண்டி கிடைக்கவில்லை.

# IX வல்லெழுத்து மிகும் இடமும் மிகா இடமும்

## வல்லெழுத்து மிகும் இடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சுரை | + | காய் | = | சுரைக்காய். |
| வாழை | + | பூ | = | வாழைப்பூ. |
| கீரை | + | தண்டு | = | கீரைத்தண்டு. |
| பலா | + | பழம் | = | பலாப்பழம். |

இவற்றில், நிலைமொழியின் கடைசியில் உயிரெழுத்தும் வருமொழி முதலில் வல்லெழுத்தும் வந்திருக்கின்றன. இவை சேரும்போது, வந்த வல்லெழுத்துக்கள் மிகுந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு உயிர் எழுத்துக்களைக் கடைசியில் உடைய சொற்களின் முன் வருமொழி முதலில் வல்லெழுத்துக்கள் வந்தால் அவை பெரும்பாலும் மிகுந்து வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பட்டு | + | புடவை | = | பட்டுப்புடவை. |
| கொக்கு | + | பறந்தது | = | கொக்குப்பறந்தது. |
| சுக்கு | + | தின்றான் | = | சுக்குத்தின்றான். |

இவற்றில், நிலைமொழியின் கடைசியில் குற்றியலுகரமும் வருமொழி முதலில் வல்லெழுத்துக்களும் வந்திருக்கின்றன. அவை சேரும்போது வருமொழி முதலிலுள்ள வல்லெழுத்து மிகுந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லெழுத்துக்கள் வந்தால் அவை பெரும்பாலும் மிகுந்து முடியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கூடி | + | குலாவினான் | = | கூடிக்குலாவினான். |
| போய் | + | சேர்ந்தான் | = | போய்ச்சேர்ந்தான். |

இவற்றில் முறையே நிலைமொழியின் கடைசியில் இ என்ற உயிரெழுத்தும் ய் என்ற மெய்யெழுத்தும், வருமொழி முதலில் வல்லெழுத்தும் வந்திருக்கின்றன. இவை சேரும்போது, வருமொழி முதலில் உள்ள வல்லெழுத்து மிகுந்திருப்பதைக் காணலாம்.

இவ்வாறு, இ என்னும் விகுதியால் முடியும் வினையெச்சத்தின் முன்னும் ய் என்னும் விகுதியையுடைய வினையெச்சத்தின் முன்னும் வல்லெழுத்துக்கள் வந்தால் மிகுந்துவரும்.

### வல்லெழுத்து மிகா இடங்கள்

பெயரெச்சத்தின் முன்னும் வினைமுற்றுக்களின் முன்னும் வல்லெழுத்து வந்தால் மிகாது.

உ-ம்:—வந்த + குதிரை = வந்த குதிரை.
சென்றன + குதிரைகள் = சென்றன குதிரைகள்.

சுட்டுப் பெயர் முன்னும் வினாப்பெயர் முன்னும் வல்லெழுத்து மிகாது.

உ-ம்:—அது + சிறிது = அது சிறிது.
எது + பெரிது = எது பெரிது.

அன்று, இன்று, என்று என்னும் காலத்தைக் குறிக்கும் சொற்களுக்குமுன் வல்லெழுத்து மிகாது.

உ-ம்:—அன்று + சொன்னாய் = அன்று சொன்னாய்.
இன்று + கண்டேன் = இன்று கண்டேன்.
என்று + தருவாய் = என்று தருவாய்.

படி என்னும் இடைச் சொல், வினைச்சொல்லோடு சேர்ந்து வரும்போது வல்லெழுத்து மிகாது.

உ-ம்:—வரும்படி + கூறினான் = வரும்படி கூறினான்.

பயிற்சி

கீழ்க்கண்ட தொடர்களில் வல்லினம் மிகுந்து வந்த இடங்களையும் மிகாமல் வந்த இடங்களையும் கண்டுபிடி.

| | |
|---|---|
| உ-ம் :—படித்துத் தேறினன் | புலிப்பால் |
| நடந்து போனன் | கொம்புத்தேன் |
| இருக்கும்படி சொன்னன் | சாந்துப்பொட்டு |
| பருப்புக் குறுணை | தேர்த்தட்டு |
| பூப்பறித்தாள் | நாய்க்கால் |
| பார்க்கப் போனன் | எக்காலம் |
| சென்று திரும்பினன் | ஒரு படி |

# III கட்டுரை

## I கட்டுரை எழுதும் முறை

கட்டுரை என்பது ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி நன்ருகச் சிந்தித்து, தனக்குத் தெரிந்த சொற்களால் பிறருக்குத் தெளிவாக விளங்கும்படி ஒழுங்கு படுத்தி எழுதுவதாகும். (கட்டு+உரை=சொற்களைச் சேர்த்து எழுதுவது). இதனை வியாசம் என்றும் கூறுவர்.

கட்டுரை எழுதும்போது முன்னுரை, பொருள், முடிவுரை என்று பிரித்துக் கொண்டு எழுத வேண்டும்.

முன்னுரை :—இதில் எடுத்துக்கொண்ட பொருளைப்பற்றி முன்னல் கூறவேண்டிய குறிப்புக்களைச் சுருக்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

பொருள் :— கட்டுரையின் முக்கியமான பகுதி இதிலேயே அடங்கும். ஆதலால், எழுத வேண்டிய பொருளைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பிரிவையும் பற்றித் தனித் தனிப் பகுதியாக எழுதவேண்டும். எழுதும்போது, கருத்து, பிறருக்கு நன்கு விளங்கும்படி எளிய இனிய நடையில் எழுதவேண்டும். பொருள் விளங்காத இடங்களில் சந்திகளைப் பிரித்து எழுதவேண்டும். பழமொழிகள், மேற்கோள்கள், உவமானங்கள் இவற்றை இடத்திற்கு ஏற்றபடி அமைத்து எழுத வேண்டும். முன்னே எழுதவேண்டிய விஷயத்தைப் பின்னும், பின்னே எழுதவேண்டிய விஷயத்தை

முன்னுமாக மாற்றி எழுதுதல் கூடாது. ஒரு முறை எழுதியதை மீண்டும் எழுதக்கூடாது.

முடிவுரை:—கட்டுரையின் முடிவில் அக் கட்டுரையிலிருந்து தெரிந்துகொள்ளும் நீதியையோ அல்லது அக் கட்டுரையால் ஏற்படும் பயனையோ சுருக்கி எழுத வேண்டும்.

இக்கட்டுரையில் சிறிதாக உள்ள ஒரு கதையை விளக்கிப் பெரிதாக எழுதுதலும், பெரிதாக உள்ள ஒரு கதையைச் சிறியதாகச் சுருக்கி எழுதுதலும், ஒரு கதையை இருவர் சேர்ந்து உரையாடுதல்போல் எழுதுதலும், படத்தைப் பார்த்துக் கதை எழுதுதலும், ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி ஒருவரை வேண்டிக் கொள்ளுதலும், கூட்டம் நடத்த இடங் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளுதலும், கூட்டம் எதிர்பாராத காரணத்தை முன்னிட்டுத் தள்ளிவைக்கப்பட்டதைத் தெரிவித்தலும், அதற்காக மன்னிப்புக் கேட்டலும், கடிதம் எழுதுதலும், அழைப்பு அனுப்புதலும், அழைப்புக்கு வரமுடியாமைக்கு மன்னிப்புக் கேட்டலும், இன்னும் இவைபோன்ற பிறவும் அடங்கும்.

## II இனிய கதைகளைத் தேர்ந்தெடுத்தல்

### 1. குமணன் கொடைத் திறம்

பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் பல வள்ளல்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் யார் எதைக் கேட்டாலும் கொடுத்து வந்ததால் அவர்களுக்கு வள்ளல்கள் என்ற பெயர் உண்டாயிற்று. அவ்வள்ளல்களில் குமணன் என்பவன் ஒருவன்.

அவன் முதிரம் என்னும் மலையையும் அதையடுத்த ஊர்களையும் ஆண்டுவந்த ஓர் சிற்றரசன். புலவர் களைக் கண்டால் அவர்களுக்குப் பொன்மாரி பொழி வான். அதனால் அவன் பெயர் எங்கும் பரவியது.

அவனுக்கு இளங்குமணன் என்ற தம்பியொரு வன் இருந்தான். அவன் தன் அண்ணனுக்கு நேர் மாறானவன். குமணனுடைய கொடை அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆதலால் அண்ணன் மீது பொறாமை கொண்டு அவனைத் தொலைக்க வழி தேடினான். இதை யறிந்த குமணன் தன்னுடைய அரசாட்சியைத் தம்பிக்குக் கொடுத்து விட்டுக் காட்டை நோக்கிச் சென்றான். குமணன் உயிரோடிருக்குமளவும் தனக் குக் கேடு நேரிடுமென்று எண்ணிய இளங்குமணன், தன் அண்ணன் தலையைக் கொண்டு வருவோருக்கு ஆயிரம் பொன் பரிசு கொடுப்பதாகப் பறையறைந்து தெரிவித்தான்.

அச்சமயத்தில் பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் குமணனிடம் பரிசு பெற வந்து அங்கு நிகழ்ந்த செய்திகளைக் கேட்டு வருந்தி, ‘எப்படியும் குமணனைப் பார்க்காமல் போவதில்லை’ என்ற உறுதி யோடு காட்டையடைந்து குமணனைக் கண்டார்; தாம் வந்த காரியத்தை அவனிடம் தெரிவித்தார். குமணன், “புலவரே! நான் அரசாண்ட காலத்தில் நீர் வர வில்லை. இப்போது நான் என் செய்வேன்? இருந் தாலும் என் தலையைக்கொண்டு வருவோருக்கு ஆயி ரம் பொன் பரிசு கொடுப்பதாக என் தம்பி அறிவித் திருக்கின்றான். ஆதலின் என் தலையைக் கொண்டு போய்க் கொடுத்து அப்பரிசைப் பெற்றுச் செல்லும்,”

என்று கூறித் தன் வாளை நீட்டினன். அது கண்ட புலவர் வியந்து, குமணன் தலைபோல் ஒரு பொய்த் தலை செய்து இளங்குமணனிடம் காட்டிப் பரிசு கேட்டார். தலையைக் கண்டதும் இளங்குமணன் நடுங்கினன். தன் முன்னோன் இறந்து விட்டானென்று வருந்தி அழுதான். "தான் ஆடாவிடினும் தன் சதை ஆடுமல்லவா?"

அது கண்ட புலவர், "குமணனை உயிர்பெறச் செய்தால் என்ன தருவாய்?" என்று கேட்டார். அதற்கு இளங்குமணன், "என் உயிரையும் தருவேன்," என்றான். உடனே புலவர் இளங்குமணனை அழைத்துக் கொண்டு போய்க் குமணன் முன்பு விட்டார். அண்ணனைக் கண்டதும் அவன் கால்களில் விழுந்து வணங்கி, தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். தம்பி மனம் மாறியதைக் கண்டு மகிழ்ந்த குமணன் அவனைத் தழுவிக்கொண்டான். தம்பியும் புலவரும் கேட்டுக்கொண்டபடி திரும்பவும் நாட்டிற்கு வந்து முடிசூடி ஆண்டுவந்தான்.

பயிற்சி

1. பெருந்தலைச் சாத்தனர் என்ற புலவர் குமணனிடம் பரிசு பெற வந்து அங்கு நிகழ்ந்த செய்திகளைக் கேட்டு மனம் வருந்தி, 'எப்படியும் குமணனைப் பார்க்காமல் போவதில்லை' என்ற உறுதியோடு காட்டையடைந்து குமணனைக் கண்டார்.—இச்சொற்றொடரில் எத்தனை சொற்கள் இருக்கின்றன? இது என்ன வாக்கியம்? இந் நீண்ட வாக்கியத்தைத் தனித்தனி சிறு வாக்கியங்களாக மாற்று. இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கண்டுபிடி.

2. உங்கள் பள்ளிக்கூடப் புத்தகசாலேயில் நீங்கள் படித்த புத்தகங்களிலிருந்து இதுபோன்ற கதைகளேயும் நல்ல பகுதிகளேயும் தேர்ந்தெடுத்துச் சிறுசிறு கட்டுரைக ளாக எழுதுங்கள்.

## 2. தையற்காரனும் யானேயும்

மதுரையில் ஒரு யானேப்பாகன் இருந்தான். அவன் ஒரு யானேயை வளர்த்து வந்தான். அவன் தினந்தோறும் யானேயைக் குளிப்பாட்டி வருவதற்கு ஆற்றுக்கு ஓட்டிக்கொண்டு போவான். போகும் வழியில் ஒரு தையற்காரன் தையற்கடை வைத்திருந் தான். அவன் யானேப்பாகனுக்கு நண்பன். ஆதலால், அப்பாகன் ஆற்றுக்குப் போகும் போதெல்லாம் யானேயை வெளியே நிறுத்திவிட்டு, அத்தையற்கார னுடன் பேசுவது வழக்கம். அப்போது அந்த யானே தன் துதிக்கையைக் கடைக்குள் நீட்டி ஏதேனும் தின் பண்டம் கேட்கும். அத் தையற்காரனும் யானேக்கு ஏதேனும் தின்பண்டம் கொடுப்பான்.

ஒரு நாள் அந்த யானே வழக்கம்போல் தன் துதிக்கையை நீட்டியது. அப்போது அவசர வேலே யில் ஈடுபட்டிருந்த அந்தத் தையற்காரன் தன் கையி லிருந்த ஊசியால் அதன் துதிக்கையில் குத்திவிட் டான். அதற்கு வலியுண்டாயிற்று. ஆயினும் யானே ஒன்றும் செய்யாமல் தன் துதிக்கையை வெளியே இழுத்துக்கொண்டது.

சிறிது நேரத்திற்கெல்லாம் பாகன் யானேயை ஆற்றுக்கு ஓட்டிச் சென்ருன். குளிப்பாட்டித் திரும்பும் போது, யானே சேற்ருேடு கூடிய நீரைத் தன்

துதிக்கை நிறைய முகந்துகொண்டு வந்தது. தையற்காரன் அப்போது பட்டுத்துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தான். யானை தன் துதிக்கையிலுள்ள சேற்று நீரை அப்பட்டுத் துணிகளின் மீது இறைத்தது. அத்துணிகள் யாவும் கெட்டுப்போயின. அதைக் கண்டு தையற்காரன் தன் செய்கைக்கு வருந்தினன்.

தையற்காரன் தனக்குச் செய்த தீமையை, யானை மனத்தில் வைத்திருந்து பதிலுக்குத் தீங்கு செய்தது. ஆதலால் நாம் யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது.

பயிற்சி

1. இப்பாடத்திலிருந்து எட்டுப் பெயர்ச்சொற்களைப் பொறுக்கி எழுது. அவைகள் இன்னின்ன பெயர்கள் என்றும் குறிப்பிடு.


2. கீழ்க்கண்டவை, நால்வகை வாக்கியங்களுள் எவ்வகையைச் சேர்ந்தவை ?

1. ஒரு யானைப்பாகன் இருந்தான்.
2. தையற்காரன் பட்டுத்துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தான்.
3. தையற்காரன் தன் செய்கைக்குவருந்தினன்.

3. நீ படித்த புத்தகங்களிலிருந்து இனிய கதைகள், நல்ல வருணனைகள், சிறந்த பகுதிகள் இவற்றைத் தேர்ந்தெடுத்துக் கட்டுரையாக எழுது.

# 3. நெற்பானையும் எலியும்

(கும்மி)



பாட்டியின் வீட்டுப் பழம்பானை—அந்தப்
பானையும் ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும்—அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா. 1
உள்ளே புகுந்து நெல் தின்று தின்று—வயி
றூதிப் புடைத்துப் பருத்ததடா
மெள்ள வெளியில் வருவதற்கும் ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா. 2




பானையைக் காலே திறந்தவுடன்—அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்தவொரு
பூனை எலியைக் கண்டதடா—ஓடிப்
போயதைக் கௌவியே சென்றதடா. 3

கள்ள வழியினிற் செல்பவரை—எமன்
காலடி பற்றித் தொடர்வானடா.
உள்ளபடியே நடப்பவர்க்குத் தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா. 4

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

## 4. சிங்கமும் முயலும்



குறுமுயல் சிங்கந்தன்னைக் கொன்றதொன்(று) உண்டேதென் [னிற்
செறியுமோர் காட்டிலேயோர் சிங்கமுண்(டு) அந்தக்காட்டில்
உறுவிலங்(கு) அனைத்தும் வேட்டை யாடியூன் மிகவுந் தின்று
வெறியோடு திரியு நாளில் விலங்கெலாம் ஒருங்குகூடி. 1

ஆணிளஞ் சிங்கமேயுன் அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்லவேண்டாம் விதத்தினில் தினமொன்ருக
ஊனுனக் களிப்போமென்ன உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ்வொன்ருய் அருந்தியங் கிருக்குநாளில். 2

தனிமுய லொன்றுக் கோர்நாள் தன்முறை வருதலோடும்
இனியது விடாது நம்மை எனினுமோர் எடுப்பெடுத்து
வினையையிப் போதுசெய்து வென்றுநாம் உய்ந்தோமாகில்
நனிவிலங் கனைத்துமுய்யு நமக்குநற் புகழுண்டென்றே. 3

கருதியச் சிங்கத்தின் தன்கடும்பசி வேளை தப்பி,
வருதலு முயலைநோக்கி மன்னனென் பசிவேளைக்குப்
பெருமத வேழமேனும் பிந்துவ(து) இல்லை பிந்தி
வருவதென் னுரைநீ என்று மனந்தனிற் சினந்து கூற. 4

ஐயநின் பசித்தவேளைக் கடியனேன் வந்தேன் ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக்கண்டு வெருவிஅங் கொளித்திருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர் பருமுழை புகுந்த பின்னர்
துய்யஉன் பக்கல் வந்தேன் சுவாமியென்(று) இறைஞ்சி நிற்க. 5

சிங்கம் நாம் அல்லால் வேறோர் சிங்கநீ கண்டாயாகில்
அங்கதைக் காட்டவாவென் றழைத்தலும் அழைத்துப்போயோர்
பங்கமும் புனலுஞ் சேர்ந்த பாழ்ந்துரவு அதனைக் காட்ட
அங்கதை எட்டிப்பார்த்(து) அதனிழல் உருவந்தோன்ற, 6

தன்னுரு நிழலைத்தானே சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்(து) அழுந்தித் துளங்கியே உயிரிழந்த
தென்னலால் உபாயத்தாலே யாவையும் வெல்ல லாமென்று
இன்னமோர் நண்டுகொக்கை யீர்ந்ததோர் கதையுஞ்
சொல்லும். 7

பயிற்சி

1. மேலே உள்ள பாடல்களைப் படித்துச் சொந்த வாக்கியங்களில் எழுது.

2. இந்தக் கதையிலிருந்து நீ அறிந்து கொண்ட நீதிகளென்ன ?

# III நல்ல பகுதிகள்—முக்கியச் செய்திகள்

## 1. தேசிங்கு ராஜனின் வீரமரணம்

தேசிங்கு ராஜனது அருமை நண்பனான முகம் மதுகானுக்குக் கலியாணம் நடந்து கொண்டிருந்த

சமயம் செஞ்சியில் சண்டையும் ஆரம்பித்தது. இது அறிந்த முகம்மதுகான் கலியாணத்தை நிறுத்திவிட்டுச் சண்டைக்குச் சென்றான். நவாபின் சேனையைச் சின்னாபின்னப்படுத்தினான். எதிர்த்து நிற்பார் ஒருவரும் இல்லை. முகம்மதுகான் கோட்டைக்குத் திரும்பினான். வழியில் பிணக்குவியலின் மறைவிலிருந்து ஒருவன் அவனை ஈட்டியால் குத்திக் கொன்றான். இதை அறிந்த ராஜாதேசிங்கு சினங்கொண்டான். சீறி எழுந்தான். போர்க்களத்திற்குச் சென்றான்.

(பாட்டு)

வலதுகாலும் விழுந்து போச்சுது பாராசாரிக்கு
இடதுகாலும் விழுந்து போச்சுது பாராசாரிக்கு
இரண்டுகாலும் விழுந்து போனதை ராஜா பார்த்தானும்
குதிரையைவிட்டுக் கீழேகுதித்தான் சிப்பாய் தேசிங்கு
குதிரையைவெட்டி அழுதானையா ராஜா தேசிங்கு

நவாபுபாளையம் புகுந்தானையா சிப்பாய் தேசிங்கு
கொக்குத்திரளில் ராஜாளிபோலப் புகுந்து வெட்டுகிறான்
வெள்ளரிக்காய் வீசினாற்போல் வீசிப் போடுகிறான்.
இருந்தபாளையம் எல்லாம்விழுந்தது தேசிங்கு கையாலே
நாவாபின்மேலே திரும்பினானையா ராஜா தேசிங்கு

நவாபும்ஓடி ஒளிந்தானையா நடுவான பாளையத்தில்
கோபம்வந்து மூண்டுகொண்டது ராஜாவுக்கானாலும்
கொக்கரித்து தண்டில் விழுந்தான் சிப்பாய் தேசிங்கு
ஆனைகுதிரை சேனையெல்லாம் அடியோடு மாண்டதாம்
நவாபுஜனங்கள் போனவழியை நானுஞ் சொலமாட்டேன்.

இவனுக்கெதிரி யாரையுங்காணோம் நவாபுபாளையத்தில்
மண்டிபோட்டு உட்கார்ந்தானையா ராஜா தேசிங்கு
''என்னுயிர்வாங்க எனக்கெதிரி யாரையுங் காணோமே
என்னுயிரோடே செஞ்சிக்கோட்டைக்கு நான்தான் போவேனோ
இனிமேலிருக்க நியாயமில்லை.'' என்று நினைத்தவனே.

கத்தியைச்சுழற்றி உயரே எறிந்தான் ராஜா தேசிங்கு
மார்பைவிரித்து மண்மேல் படுத்தான் ராஜா தேசிங்கு
கிருஷ்ணு! ராமா! என்றுசொல்லிக் கீழே விழுந்தானே
ராஜாவிழுந்ததை கண்ணுல் கண்டான் நவாபு சைதுல்லா
தூக்கிஎடுத்து மடிமேல்வைத்தான் நவாபு சைதுல்லா.

பயிற்சி

1. தேசிங்கு குதிரையை விட்டுக் கீழே இறங்கக் காரணமென்ன ?

2. தேசிங்கு யுத்தம்செய்தது எதைப்போலிருந்தது?

## 2. காந்தியடிகளின் கொள்கைகள்

உண்மை பேசுதல், பிறஉயிரை வருத்தாமை, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சாதி வேறுபாடு பாராட்டாமை, நாட்டுக் கைத்தொழில் முன்னேற்றம்.

மேற்கூறிய விடயங்கள் ஒவ்வொன்றையும் பற்றி நீ தெரிந்து கொண்டதைக் கூறு.

---


# IV குறிப்புக்களிலிருந்து கதை-நிகழ்ச்சி எழுதுதல்

## 1. சிங்கமும் சுண்டெலியும்

காட்டில் சிங்கம் — உறங்குதல் — சுண்டெலிகள் விளையாடுதல்—ஒன்று சிங்கத்தின்மேல் ஏறிக் குதித்தல்—உறக்கம் கலைதல்—கோபம் கொள்ளுதல்—சுண்டெலி நடுங்குதல்—சுண்டெலியைக்கொல்லாமல் விடுதல்.

சிங்கம் இரைதேடச் செல்லுதல்—வேடன் கட்டிய வலையில் அகப்படுதல்—சிங்கம் கர்ச்சித்தல்—சுண்

டெலி சத்தம்கேட்டு வந்து வலையை அறுத்தல்—சிங்கம் விடுதலை அடைதல்.



மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புக்களை வைத்துக்கொண்டு கதையை விரிவாக எழுது.

## 2. உதவி வீண் போகாது

காவனூர் கிராமம்—கோபாலன் என்ற பையன்—பிராணிகளிடம் இரக்கமும் அன்பும் உள்ளவன்—அயலூருக்குப் போக நேர்தல்—கட்டுச்சோறு கொண்டு போதல்.

வழியில் ஒரு காடு—சேறு நிறைந்த குட்டை—குருடன் அதில் தத்தளித்தல்—கரையேற்ற உதவி வேண்டுதல்—கோபாலன் அவனைக் கரையேற்றி விட்டுப் புறப்படுதல்.

பாதை ஓரத்தில்—பசியால் மயங்கிக் கிடக்கும் நொண்டி—நொண்டி கோபாலனை உணவு கேட்டல்—கோபாலன் கட்டுச்சோறு கொடுத்துவிட்டு விரைந்து செல்லல்.

இரவு—இருட்டு—கோபாலன் திரும்புதல்—நடுக் காடு—இரண்டு திருடர்கள் அவனை மடக்கிக்கொள் ளல்—கோபாலன் கூக்குரலிடுதல்—"வாருங்கள், பிடி யுங்கள், அடியுங்கள், கட்டுங்கள்," என்ற சத்தம் கேட் டல்—திருடர்கள் ஓடிவிடுதல்—குருடன் தோளில் நொண்டி தோன்றல்—தான் செய்த உபகாரம் பெற்ற அவர்கள் தனக்கு உதவி செய்ததைக் கோபாலன் அறிதல்—கோபாலன் நன்றி கூறுதல்—சௌக்கிய மாய் வீடு சேர்தல்.

மேலே கொடுக்கப்பட்ட குறிப்புக்களை வைத்துக் கொண்டு கதையை விரிவாக எழுது.

## 3. ஆபத்தில் உதவி

சோழவந்தான்—வைகை நதியில் வெள்ளம்—கரையோர வீடுகள்—வீடுகளில் தண்ணீர் பெருகு தல்—வீடுகளில் வசிப்போர் தத்தளித்தல்—ஆடுமாடு முதலிய உயிர்ப்பிராணிகள் தவித்தல்—சமூக சேவா சங்கம்—சாரணர் இயக்கம் உதவுதல்—படகுகள்—அகதிகளைக் காப்பாற்றுதல்—உணவு, உடை அளித் தல்—வெள்ளம் வடிதல்—நிதி வசூல் செய்தல்—புது வீடுகள் கட்டிக் கொடுத்தல்—எளியோர் மகிழ்ச்சி.

மேற்கூறிய குறிப்புக்கள் மூலம் நிகழ்ச்சியை விவரித்து எழுது.

# V படம் பார்த்து விளக்கி எழுதுதல்

## 1. கிராமம்



மேலே உள்ள படத்தில் நீ என்னென்ன பொருளேப் பார்க்கிருய்? அவற்றை வைத்துக் கொண்டு கிராமத்தைப்பற்றி ஒரு சிறு கட்டுரை எழுது.

## 2. தபால் நிலையம்




மேலே உள்ள படத்தில் நீ காண்பவற்றை வைத்துக்கொண்டு தபால் கடிதத்தின் பிரயாணத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுது.

பயிற்சி

1. கிராமப் படத்தில் காணப்படும் உயர்திணைப் பொருளையும் அஃறிணைப்பொருள்களையும் எடுத்து எழுது.

2. நீ உங்கள் ஊரிலுள்ள தபால் நிலையத்திற்குச் சென்றிருக்கிருயா ? இல்லையானல் உடனே போய்ப்பார்.

3. நீ போடும் கடிதத்தை என்ன செய்கிருர்கள் ? அது எவ்வாறு நீ எழுதியவருக்குப் போய்ச் சேருகின்றது ?

4. மற்றவரிடமிருந்து உனக்கு எப்படித் தபால் வந்து சேருகின்றது ?

---

# IV கிராமக் கைத்தொழில்கள்

## 1. கயிறு திரித்தல்

கிராமத்தில் நடைபெறும் கைத்தொழில்களைக் கிராமக் கைத்தொழில்கள் என்று கூறுவர். அவற்றுள் குடிசைத்தொழில் மிகவும் முக்கியமானது. கயிறு திரித்தலும் ஒரு கைத்தொழிலாகும். இத்தொழிலை யாவரும் எங்கும் செய்யலாம். இதற்கு அதிகமான பொருள் வேண்டுவதில்லை. இக்கயிறுகளில் நூற் கயிறு, பனைநார்க் கயிறு, தென்னஞ் சவுரிக் கயிறு அல்லது கொச்சைக் கயிறு, சணல் கயிறு எனப் பல வகைகள் உண்டு.

நூற் கயிறு திரிப்பது மிகவும் எளிது. நூலில் இரண்டு அல்லது மூன்று இழைகளை ஒன்று சேர்த்து நம் கைக்கு வசமான பக்கமாகத் திரிக்க வேண்டும். இதற்குப் புரி என்று பெயர். பிறகு இரண்டு அல்லது மூன்று புரிகளைச் சேர்த்து

எதிர்ப் பக்கமாய்த் திரிக்க வேண்டும். அப்போது புரிகள் முறுக்குண்டு கயிறு ஆகும். முறுக்குகள் நிற்கும்வரை கயிற்றைச் சுற்றி வைக்கவேண்டும்.

கொச்சைக் கயிறு தயாரிக்க, தேங்காயை உரித்த பின் அதன் மட்டையைத் தண்ணீரில் நன்ருக ஊற வைக்க வேண்டும். ஊறியபின் அதை ஒரு கல்லின் மேல் வைத்து ஒரு கட்டையால் அடித்தால் மெது வான சவுரி கிடைக்கும். இதைச் சிக்கல் எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டிக் காய வைப்பார்கள். பிறகு கைக் கருவி கொண்டு புரியாகத் திரிப்பார்கள். பாரக்கயிறு, வடக்கயிறு, தண்ணீர்க்கயிறு முதலியன வும் தென்னம் சவுரியிலிருந்தே செய்யப்படுகின்றன. பனைநார்க் கயிறுகளும் சணல் கயிறுகளும் இது போலவே திரிக்கப்படுகின்றன.

பயிற்சி

1. திரிப்பார்கள், பொருள், எளிது, புரிகள், கல், கட்டை, தேங்காய், சவுரி இச்சொற்களிலுள்ள திணை, பால், எண் இவற்றைக் கண்டுபிடி.

2. இக்கட்டுரையிலிருந்து உயர்திணை, அஃறிணை, பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், ஒருமை, பன்மை இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணங்கள் கொடு.

---

## 2. தேங்காய் எண்ணெய் எடுத்தல்

தென்னை மரம் பல வகையில் மக்களுக்குப் பயன் படுகிறது. ஆதலால் இதைக் கற்பகதரு என்றுகூடச் சொல்லலாம். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இம்மரத் தின் தேங்காய் மட்டையிலிருந்து கயிறு திரிக்கும்

வகையை முந்திய கட்டுரையில் படித்தீர்கள். இப்பொழுது தேங்காயிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் முறையைக் கண்டறியலாம்.

தென்னை மரத்தில் நன்ருக முதிர்ந்துள்ள தேங்காய் நெற்றுக்களைப் பறித்து மேலே உள்ள மட்டைகளை நீக்கிவிட்டு உள்ளே இருக்கும் காயை உடைத்து அதனுள்ளிருக்கும் பருப்பை எடுக்க வேண்டும். அவற்றை நன்ருக வெயிலில் காயவைக்க வேண்டும். இரண்டொரு தினங்கள் காயவைத்தால், அவற்றிலுள்ள தண்ணீர் வற்றி நன்ருக உலரும். பின்பு அவற்றைச் செக்கிலிட்டு ஆட்டினுல் எண்ணெய் வரும்.

சிலர் முற்றிய தேங்காயை ஆட்டுக்கல்லில் போட்டு ஆட்டி, ஒரு பாத்திரத்தில் இட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சுவார்கள். அதிலுள்ள தண்ணீர் ஆவியாக மாறிய பிறகு எண்ணெயும் சக்கையும் தங்கியிருக்கும். பிறகு அந்த எண்ணெயை வடிகட்டி எடுத்து வைத்துக் கொள்வார்கள்.

இந்த எண்ணெய் சமையல் செய்வதற்கும், பலவகைத் தின்பண்டங்கள் தயாரிப்பதற்கும், தலையில் தடவிக்கொள்வதற்கும் பயன்படுகிறது. மலையாளம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இந்த எண்ணெய், தேய்த்துக் குளித்தல், சமைத்தல் முதலிய எல்லாக் காரியங்களுக்கும் மிகவும் பயன்படுகிறது. இதனுல் மெழுகுவர்த்தி, சோப்பு முதலிய பொருள்கள் செய்யப்படுகின்றன. தேங்காய்ப்பிண்ணுக்கு மாட்டுக்குத் தீனியாகவும், நிலத்திற்கு உரமாகவும் பயன்படுகிறது.

பயிற்சி

1. தென்னைமரத்தின் பலவகைப் பயன்களைக் கூறு. இதைக் கற்பகதரு என்று ஏன் கூறுகின்றோம்?

2. கீழ்க்கண்ட சொற்கள் எந்தெந்த இடத்தைச் சேர்ந்தவை?

படித்தீர்கள், சொல்லுகின்றோம், பயன்படுகிறது, செய்யப்படுகின்றன, பயன்படுத்துகிறார்கள்.

3. கீழ்க்கண்ட சொற்களில் என்னென்ன வேற்றுமை உருபு வந்துள்ளது?

நெற்றுக்களை, வெயிலில், மாட்டிற்கு, எண்ணெயிலிருந்து, எண்ணெய் வரும்.

## 3. சட்டிபானை செய்தல்

நமது வீடுகளில் பெரும்பாலும் வெண்கலம், பித்தளை முதலிய பாண்டங்களைச் சமையல் செய்வதற்கும் வேறு காரியங்களுக்கும் பயன்படுத்துவதை நீங்கள் பார்க்கிறீர்கள். சிலர் மட்பாண்டங்களில் தண்ணீர் எடுத்துச் செல்வதையும் சமையல் செய்வதையும் பார்த்திருக்கிறீர்கள். இவ்விரண்டிலும் எவை உயர்ந்தவை என்று நினைத்துப் பார்த்தால் மட்பாண்டங்களே பல வகைகளிலும் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. ஏனெனில் பித்தளை, வெண்கலப் பாண்டங்களில் களிம்பு ஏறி தேக சுகத்திற்குக் கேடு உண்டாகும். அத்தீமைகள் இம்மட்பாண்டங்களால் உண்டாவதில்லை. இப்பாண்டங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பதைச் சற்று கவனிப்போம்.

மட்பாண்டங்கள் செய்வதற்கு நல்ல களிமண்ணாக இருக்க வேண்டும். அதை வெட்டி எடுத்து வந்து ஊறவைத்துக் கால்களினால் நன்றாக மிதித்துப்

பிசைதல் வேண்டும். அவற்ருேடு கலந்து கிடக்கும் சிறு கற்கள், சிறு குச்சிகள் முதலியவற்றைப் பொறுக்கி எடுத்துவிட வேண்டும். பிறகு அக்களி மண்ணை மட்பாண்டங்கள் செய்வதற்கு என்று ஏற் பட்ட சக்கரத்தின் நடுவில் வைத்துச் சக்கரத்தைச் சுற்ற வேண்டும். அப்போது சக்கரத்தில் வைக்கப் பட்டிருக்கும் களிமண்ணைச் சட்டி, பானை, குடம், உலை மூடி, கலையம் முதலிய உருவங்கள் உண்டாகும்படி கையினுல் உள்ளும் புறமும் அமைக்கவேண்டும். அவ் வுருவம் முற்றுப்பெற்றவுடன் அடியில் அறுத்து எடுத்து அறுத்த வாயைப் பொருத்தி வெயிலில் காய வைக்க வேண்டும். பிறகு சூளையில் வைத்துச் சுட்டு மட்பாண்டங்களாக எடுத்துப் பயன்படுத்தலாம்.

பயிற்சி

இக்கட்டுரையிலிருந்து வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் இவற்றிற்கு மூன்று மூன்று உதாரணங்கள் கொடு.

## 4. நூல் நூற்றல்

நாம் உடுக்கும் ஆடைகளில் சில பஞ்சினுல் செய் யப்பட்டவை. சில பட்டினுல் செய்யப்பட்டவை. இவற்றுள் பெரும்பாலும் பஞ்சினுல் செய்யப்பட்ட ஆடைகளையே நாம் பயன்படுத்துகின்ருேம். இவ் வாடைகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்ப தைப் பார்ப்போம்.

பருத்தியைச் செடியிலிருந்து எடுத்து வந்து சிறிது நேரம் சூடேறும்படி வெயிலில் காய வைக்க வேண்டும். அதிலுள்ள இலை, தூசி முதலியவைகளை

நீக்கவேண்டும். பிறகு பஞ்சை வேருகவும் கொட்டையை வேருகவும் பிரிக்கும் மணையில் வைத்து அரைக்க வேண்டும். அவ்வாறு அரைத்தால் கொட்டை ஒரு புறமும் பஞ்சு மற்ருெரு புறமும் விழும். அவ்வாறு விழுந்த பஞ்சை ஒன்ருகச் சேர்த்து, காற்றில் பறந்து போகாத இடத்தில் வைத்துக் கொண்டு, வில்லினுல் கொட்ட வேண்டும். கொட்டினுல் அப்பஞ்சு இறுகி நிற்காமல் மெதுவாக நெகிழ்ந்து இருக்கும். அதனைப் பட்டை போட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு பட்டை போட்ட பஞ்சை ராட்டைகளின் மூலமாகவும், தக்ளிகளின் மூலமாகவும் நூலாக நூற்கலாம். நூற்ற நூலைச் சிட்டங்களாகச் சுற்றிப் பின்பு பாவாற்றி என்னும் கருவியால் கஞ்சிப் பசை போட்டு வலிமையுண்டாகும்படி செய்து தறிகளில் கொடுத்து, துண்டுகளாகவும், ஆடைகளாகவும், சட்டைத் துணிகளாகவும் நெய்து எடுத்துக் கொள்ளலாம்.

பயிற்சி

கீழ்க்கண்ட கைத்தொழில்களைப்பற்றி மும்மூன்று பகுதிகளாகக் கட்டுரை வரைக:—

*(1) பாய் பின்னுதல் (2) கூடை முடைதல் (3) செங்கல் அறுத்துச் சுடுதல் (4) ஓடு செய்தல் (5) சுண்ணும்பு தயாரித்தல்.

---

*ஆசிரியர் மாணவர்களைச் சமீபத்தில் நடைபெறும் தொழிற்சாலைகளுக்கு அழைத்துச் சென்று நேரில் காண்பிக்கவும்.

# VII விவசாய முறைகள்

## 1. கரும்பு பயிர் செய்தல்

நாம் அருந்தும் பானங்களாகிய பால், காபி, தேநீர் முதலியவற்றில் சர்க்கரையைக் கலந்து உட்கொள்ளுகின்ருேம். சர்க்கரையில் பல வகைகள் உண்டு. அவை பழுப்புச் சர்க்கரை, வெள்ளைச் சர்க்கரை, மணல் சர்க்கரை என்பனவாம். சர்க்கரை முக்கியமாகக் கரும்பின் சாற்றிலிருந்தே செய்யப்பட்டு வருகிறது. கரும்பு நமது நாட்டிலும் சீன நாட்டிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்ததாகத் தெரிகிறது. நமது நாட்டிலிருந்து தான் மற்ற நாடுகளுக்குக் கரும்பு கொண்டு போகப்பட்டது. கரும்பு உஷ்ணப் பிரதேசங்களிலேயே பயிர் செய்யப்படுகின்றது.

கரும்பில் செங்கரும்பு, வெண்கரும்பு, நாமக் கரும்பு எனப் பலவகைகள் உண்டு. இவற்றில் செங்கரும்பே மிகவும் இனிப்பானது. கரும்பு எவ்வாறு பயிர் செய்யப்படுகின்றது என்பதைப் பார்ப்போம். விதையிலிருந்து கரும்பு பயிர் செய்யப்படுவதில்லை. நிலத்தை நன்ருக உழுது பண்படுத்துவார்கள். பின்பு நன்ருக முற்றிய கரும்புகளைக் கொண்டுவந்து, கணுக்கள் சிதையாமல் துண்டாக வெட்டி எடுத்துக் கொள்வார்கள். அவற்றை நிலத்தில் சிறிது தூரத்திற்கு ஒன்ருக நடுவார்கள். நட்ட பிறகு அடிக்கடி தண்ணீர் பாய்ச்சுவார்கள். அது வேரூன்றித் தோகைகள் வளர்ந்து ஒரு வருடத்தில் நல்ல பலனைக் கொடுக்கும். கரும்பு சுமார் ஆறடி முதல் பன்னி

ரண்டடி உயரம் வரை வளரும். இக்கரும்புகள் ஓர் அங்குலம் முதல் இரண்டு அங்குலம் வரை பருமனாக இருக்கும். கரும்பினடிப்பாகம் மிக இனிப்பாகவும் நுனிப்பாகம் சற்று உப்பாகவும் இருக்கும். தோகை இருக்கும் பாகம் கொழுத்தாடை எனப்படும்.


பயிற்சி

1. தேசம், தோகை, இனிப்பு, பயிர் செய்தல், வருடம், உப்பு, சினம், சர்க்கரை, பழுப்பு இவை என்னென்ன பெயர்ச்சொற்கள் என்பதை எடுத்தெழுது.

2. இக்கட்டுரையிலிருந்து அஃறிணைக்கு ஐந்து உதாரணங்கள் கொடு.

3. இக்கட்டுரையில் முதல் பகுதியிலுள்ள ஏழு வாக்கியங்களையும் இன்னின்ன வாக்கியம் எனக் குறித்து எழுது.

## 2. நெல் பயிர் செய்தல்



இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் பற்றி இரண்டிரண்டு தொடர்கள் சொல்லு. பின்பு அவற்றைச் சேர்த்துக் கோவையாக ஒரு கட்டுரை எழுது.

பயிற்சி

கீழ்க்கண்ட செய்திகளைப்பற்றித் தனித்தனிக் கட்டுரை எழுது.

*1. பருத்தி பயிரிடுதல். 2. புகையிலை பயிர் செய்தல். 3. வாழைத் தோட்டம் வைத்தல்.

---

# VIII திருவிழாக்கள்

## 1. தெப்பத் திருவிழா

மதுரை மாநகர் பண்டைக்காலத்தில் பாண்டிய மன்னர்களின் தலைநகராக இருந்தது. தற்காலத்திலும் இது சென்னை இராஜ்யத்தில் இரண்டாவது பெரிய நகரமாக விளங்குகிறது. இங்கேதான் கடைசித் தமிழ்ச் சங்கம் இருந்தது. இச்சங்கத்தில் பல புலவர்கள் இருந்து தமிழை வளர்த்தனர்.

இந்நகரில் உலகப் புகழ் பெற்ற மீனாட்சியம்மன் கோவில், புது மண்டபம், திருமலை நாயக்கர் மஹால், வண்டியூர்த் தெப்பக்குளம், தமுக்கம் பங்களா போன்ற கண்ணுக்கினிய காட்சி நிறைந்த பல கட்டடங்கள் இருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த மதுரை மாநகரில் மீனாட்சியம்மன் கோவிலில் ஒவ்வொரு மாதமும் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

அவற்றுள் தை மாதம் நடைபெறும் தெப்பத் திருவிழா மிகவும் முக்கியமானது. அத்தெப்பக் குளம் திருமலை நாயக்கரால் வெட்டப்பட்டது.

---

*ஆசிரியர் இவ்விஷயங்களைப்பற்றி மாணவர்கள் நேரில் அறிந்து வரச் செய்யவும்.

சுமார் ஒரு மைல் சுற்றளவு உள்ளது. சதுர வடிவில் அமைந்துள்ளது. இதன் மத்தியிலுள்ள மண்டபத்தில் திருமலே நாயக்கரது உருவச்சிலே நிறுவப் பட்டுள்ளது. இதைச் சுற்றிலும் பலவகை மரங்கள் அடர்ந்த அழகிய சோலே ஒன்று இருக்கின்றது. இத்திருவிழா ஒவ்வொரு ஆண்டும், மதுரையை ஆண்ட திருமலே நாயக்கர் பிறந்த நட்சத்திரமாகிய பூசத்தன்று நடைபெற்று வருகின்றது. அதனல் இவ்விழாவைத் தைப்பூசத் திருவிழா என்றும் சொல் வார்கள். அன்றைய தினம் காலேயில் மீனுட்சியம்மை யும் சுந்தரேசப் பெருமானும் மதுரைக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்திலிருக்கும் வண்டியூர் என்னும் கிராமத்தின் பக்கத்திலிருக்கும் இத்தெப்பக்குளத் திற்குச் செல்வது வழக்கம். பிறகு தெப்பக்குளத்தில் மிதக்கவிடப்பட்டிருக்கும் தெப்பத்தில் சுவாமியையும் அம்மனேயும் ஏற்றி வைத்துக் காலேயில் ஓர் முறை யும், நடுப்பகலில் ஓர் முறையும் சுற்றி வந்த பிறகு, அக்குளத்தின் நடுவிலுள்ள மண்டபத்தில் சுவாமி யையும் அம்மனேயும் எழுந்தருளச் செய்வார்கள்.

இருட்டியவுடன் தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள கரைகளிலும் படிக்கட்டுகளிலும் ஏற்றி வைத்திருக்கும் விளக்குகள் தண்ணீருக்குள் தோன்றும் காட்சி மிக அழகாக இருக்கும். இரவு சுமார் 8 மணிக்கு மீண்டும் மூன்ருவது முறையாகச் சுற்றி வந்து சுவாமியும் அம் மனும் குதிரை வாகனத்தில் கோவிலுக்குத் திரும்பு வது வழக்கம். இத்திருவிழாவைக் காண்பதற்காக மதுரையிலிருந்தும், சுற்றுப்புறக் கிராமங்களிலிருந் தும், மக்கள் திரள்திரளாக வந்து கூடுவார்கள்.

தெப்பத் திருவிழாவின் முடிவில் நடைபெறும் வாண வேடிக்கைக் காட்சி மிகவும் பார்க்கத் தக்கது. அன்று முழு நிலா ஒளி வீசி மக்களை மனமகிழச் செய்யும். இத்திருவிழாவைப் பார்க்கச் செல்லும் மக்களில் பெரும்பாலோர் கரும்புகளை வாங்கித் தின்று கொண்டே செல்வர்.


### பயிற்சி

1. கீழ்க்கண்ட சொற்றொடர்களிலுள்ள உயிரெழுத்து, உயிர்மெய்யெழுத்து இவைகளைத் தனித் தனி எடுத்தெழுதுக:—

    1. இங்கேதான் கடைசித் தமிழ்ச்சங்கம் இருந்தது.
    2. சதுர வடிவில் அமைந்துள்ளது.
    3. இதைச் சுற்றிலும் பலவகை மரங்கள் அடர்ந்த அழகிய சோலை ஒன்று இருக்கின்றது.

2. மேலே கண்ட தொடர்களிலிருந்து குற்றெழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள், சுட்டெழுத்துக்கள் இவற்றை எடுத்தெழுது.

## 2. தேர்த் திருவிழா



மேலே கொடுக்கப்பட்டுள்ள படம் என்ன திரு விழாவைக் குறிக்கிறது? இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு இதுபோல் நீ பார்த்த ஒரு தேர்த் திருவிழாவைப்பற்றி ஒரு கட்டுரை எழுது.

---

## 3. பொங்கல் திருநாள்

1. பொங்கல் திருநாள் எப்போது கொண்டாடு வார்கள்?

2. அவ்விழாவைக் கொண்டாடுவதன் நோக்கம் என்ன?

3. அன்றையதினம் உங்கள் வீட்டில் என் னென்ன செய்வார்கள்?

4. பொங்கல் திருநாளை எவ்வாறு கொண்டாடுவார்கள் ?

5. எத்தனை நாட்கள் கொண்டாடுவார்கள் ?

6. பொங்கலுக்கு வேண்டிய பொருள்கள் எவை ?



7. மாட்டுப் பொங்கல் கொண்டாடுவதன் நோக்கம் என்ன ?

8. மாட்டுப்பொங்கலை எவ்வாறு கொண்டாடுவார்கள் ?

9. உங்கள் ஊரில் சல்லிக்கட்டு நடைபெறுவதுண்டா ? அது எவ்வாறு நடைபெறுகிறது ?

10. மேலே கண்ட கேள்விகளுக்கு வரும் விடைகளையும் நீ பார்த்தவைகளையும் வைத்துக் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

11. கீழ்க்கண்டவைகளைப் பற்றித் தனித் தனிக் கட்டுரையாக எழுது :—

1. தீபாவளிப் பண்டிகை.
2. ரம்ஸான் பண்டிகை.

---

## IX நாட்குறிப்பு எழுதுதல்

| | |
|---|---|
| 15—5—'47 வியாழன் | மாலை 7 மணிக்குச் சென்னைக்குப் போகும் வண்டியிலேறினேன். |
| 16—5—'47 வெள்ளி | காலை 7 மணிக்கு சென்னையிலிறங்கினேன். மவுண்டு ரோடுக்குச் சென்று நண்பரைச் சந்தித்து அவருடன் திருவல்லிக்கேணியில் தங்கினேன். மாலை 4 மணிக்கு உயர்தர நீதிமன்றத்தையும் அதன் மீதுள்ள கலங்கரை விளக்கத்தையும் பார்த்தேன். நண்பருடன் கடற்கரையில் உலாவினேன். |
| 17—5—'47 சனி | பல இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு மிருகக் காட்சி சாலைக்குச் சென்றேன். அங்குப் பலவித உயிர்ப் பிராணிகளையும் பார்த்தேன். |
| 18—5—'47 ஞாயிறு | நண்பருடன் சினிமாவுக்குப் போனேன். |
| 19—5—'47 திங்கள் | நண்பருடன் துறைமுகம் சென்று கப்பலேறிப் பார்வையிட்டேன். புத்தகங்கள் சில வாங்கினேன். தம்பிக்கும் |

தங்கைக்கும் விளையாட்டுச் சாமான்கள் வாங்கினேன். இரவு கந்தசாமி கோவிலுக்குப் போய்த் தரிசனம் செய்தேன்.

| | |
|---|---|
| 20—5—'47 செவ்வாய் | திருச்சிராப்பள்ளி வண்டியிலேறி ஸ்ரீரங்கத்திலிறங்கினேன். காவிரியில் நீராடி ஸ்ரீரங்கநாதரைத் தரிசித்தேன். |
| 21—5—'47 புதன் | திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையிலுள்ள தாயுமானவர் கோவில், உச்சிப் பிள்ளையார் கோவில் முதலியவற்றைப் பார்த்தேன். நகராண்மைத் தலைவர் திரு பி. எஸ். வேணுகோபால் நாயுடு அவர்களுடன் விருந்துண்டேன். |
| 22—5—'47 வியாழன் | திரும்பவும் ஊர் போய்ச் சேர்ந்தேன். |

## பயிற்சி

கீழ்க்கண்ட செய்திகளைப்பற்றிச் சுருக்கமாக நாட்குறிப்பு எழுது :—

1. நீ தினந்தோறும் பள்ளியில் செய்துவரும் வேலை.

2. மகிழ்ச்சிப் பயணத்தில் நீ கண்ட காட்சியைப் பற்றிய குறிப்புக்கள்.

3. நீ கேட்ட சொற்பொழிவு பற்றிய குறிப்புக்கள்.

## X குறிப்புக்களின்றிக் கதை எழுதுதல்

1. நாயின் நன்றியறிவை விளக்கும் ஒரு கதையை உனது சொற்கொண்டு விளக்கி எழுது.

2. காக்கையின் புத்திக்கூர்மையை விளக்கும் ஒரு கதையை எழுது.

3. நரியின் சூழ்ச்சியைக் குறிக்கும் கதைகளில் ஒன்றை உன் சொந்த வாக்கியங்களில் எழுது.

4. கீழ்க்கண்ட கதைகளுள் உனக்குத் தெரிந்த ஒன்றை உன் சொந்த வாக்கியங்களில் எழுது.

(அ) முயலும் ஆமையும்.
(ஆ) குரங்கும் குருவியும்.
(இ) ஓநாயும் கொக்கும்.
(ஈ) ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

5. (அ) குரங்கும் முதலையும்.
(ஆ) விறகு வெட்டியும் வனதேவதையும்.
(இ) தெனாலிராமனும் திருடர்களும்.
(ஈ) கரடியும் இரண்டு சிநேகிதர்களும்.

மேலேகண்ட கதைகளில் உனக்குத் தெரிந்த ஒன்றை விளக்கி எழுது.

6. குமணன், நளன் சாவித்திரி, அரிச்சந்திரன்

மேற்கண்டவர்களில் உனக்குத் தெரிந்த ஒருவரின் கதையை விளக்கி எழுதி, அதிலிருந்து நீ தெரிந்துகொள்ளும் நீதியையும் எழுது.

# XI விடயதானஞ் செய்தல்

கோவை,
26—12-'47.

பத்திராதிபர்,
பள்ளிக்கூட மாணவர் செய்தித்தாள்
இராமகிருஷ்ண வித்தியாலயம்,
பெரியநாயக்கன் பாளையம்.

அன்புமிக்க ஐயா!

நான் விடுமுறை விட்டவுடன் இங்கு வந்திருக்கின்றேன். இதனுடனிருக்கும் 'மதுவிலக்கு' என்னும் தலைப்புள்ள கட்டுரையை நமது பள்ளிக்கூடச் செய்தித்தாளில் வெளியிட வேண்டுமென மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இதனுடன் என் நண்பன் வரைந்த ஒரு படத்தையும் வைத்திருக்கின்றேன். இதனையும் சேர்த்துப் பிரசுரிக்கவும்.

இப்படிக்கு
தங்கள் பணிவுள்ள,
சந்தானலிங்கம்,
மாணவன்.

## மதுவிலக்கு

கடவுள் மனிதருக்கு நன்மை தீமைகளைப் பகுத்தறியும் பொருட்டு அறிவைக் கொடுத்திருக்கின்றார். சிலர் அவ்வறிவைச் சாராயம், கள், கஞ்சா, அபின் போன்ற போதைப் பொருள்களை உட்கொண்டு வீணே கெடுத்துக்கொள்ளுகின்றனர். சிலர் மேல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் விலையுயர்ந்த போதைப் பொருள்களை உட்கொண்டு அறிவை யிழக்கின்றனர். இக்குடியினால், நம் நட்டிலிருந்து கோடிக் கணக்கான பொருள் மேல் நாட்டிற்குச் செல்கின்றது. இன்னும் இக்குடியால் விளையுந் தீமைகள் பல. அவைகளைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

செல்வக் குடும்பத்தில் பிறந்தவர்கள் குடிப்பதை உயர்வாகக் கருதுகின்றனர். அதற்காக ஏராளமான பொருள்களையும் செலவிடுகின்றனர். பிறர் கூறும் பழிச்சொற்களையும் எண்ணுவதில்லை. இவர் வாழ்க்கை இவ்வாறு இருக்கிறதென்றால், மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்தும் நிலையிலுள்ள ஏழை மக்களுங்கூட இக் குடியால் வரும் கெடுதியை உணருவதில்லை. நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுத் தேடிய பணத்தைக் கள்ளுக்கடைகளிலும், அபின் கடைகளிலும், சாராயக் கடைகளிலும் கொடுத்து, அவற்றை வாங்கியுண்டு அறிவையிழந்து தெருக்களில் கண்டோர் எல்லாம் சிரிக்கும்படி நடை தடுமாறி, உடையை யிழந்து, கீழே விழுந்து உருளுகின்றனர். இன்னும் சிலர் கஞ்சா, அபின்




குடியினால் வரும் கேடுகள்

முதலிய பொருள்களைத் தின்று எலும்பும் தோலு மாகிப் பல நோய்களுக்குட்பட்டு வருந்தி அகால மரணமடைகின்றனர்.

மற்றும் சிலர் கடும் உழைப்பால் கிடைத்த குறைந்த கூலியையும் குடிவகைகளிற் செலவழித்து விட்டுக் கையில் பொருளின்றிக் கடன் கொடுப்பாரு மின்றி வீட்டிற்கு வேண்டிய பொருள்களையும் வாங்க முடியாமல் பலநாள் பட்டினிகிடந்து வருந்துகின்ற னர். இவர்களோடு மட்டுமல்லாமல் மனைவி மக்களும் பசியால் வருந்துகின்றனர். நம் நாட்டில் ஏழை மக்களே இம்மதுவரக்கனுக்குப் பலியாகின்றனர். சில வேளைகளில் குடிப்பதற்குப் பணம் இல்லாவிட்டால் தம் மனைவி மக்களையடித்துத் துன்புறுத்தி அவர் களிடமுள்ள சிறு நகைகளையும் பறித்துச் சென்று குடிக்கின்றனர். அக்குடி வெறியால் தம் மனைவி மக்களை அடித்துக்கொன்றவர்கள் எத்தனையோ பேர்? அந்தோ கொடுமை! பின்பு போலீசாரிடம் அகப் பட்டுக் கொண்டு நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணையின் மேல் கடுந்தண்டனை யடைகின்றனர். இக்குடியினுல் நம் நாடு கேவல மான நிலைமையை யடைந்து வறுமையினுல் வருந் திச் சீர்குலைந்து கிடக்கின்றது.

இதனை நன்கு எண்ணி நமது அரசாங்கத்தார் மதுவரக்கனை நம் நாட்டை விட்டு ஒழிக்கவும் ஏழை மக்களைக் காக்கவும், "மதுவிலக்குச் சட்டம்" என்ற சட்டத்தைக் கொண்டு வந்தனர். இச் சட்டத்தின் மூலம் ஏற்பட்டுள்ள நன்மைகள் பல. இச் சட்டம்

நன்ருக வெற்றி பெற வேண்டுமானுல் பொதுமக்க ளும் அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்க வேண்டும். திருட்டுத்தனமாகக் கள் இறக்குதல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல் போன்ற குற்றங்களைக் கண்டுபிடித்து அரசாங்கத்தாருக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். குடியால் வரும் தீமைகளைப்பற்றிப் பொதுமக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இவ் வாறு ஒத்துழைத்தால் மக்கள் குடியின் பிடியிலிருந்து விடுபடுவர். பணமும் மிஞ்சும்; நாடும் முன்னேற்ற மடையும்.

பயிற்சி

கீழ்வரும் தலைப்புக்களை வைத்துக் கொண்டு உங்கள் பள்ளிக்கூடச் செய்தித்தாளுக்குக் கட்டுரை எழுது :—

1. கிராமத்தைத் திருத்தியமைத்தல்.
2. சிக்கன வாழ்வு.
3. குடிசைத் தொழில்.
4. உடற்பயிற்சி.

---

# XII கடிதங்கள்

## 1. கடிதம் எழுதும் முறை

நாம் அயலூரிலிருக்கும் நம்முடைய உறவின ருக்கோ நண்பருக்கோ கடிதம் எழுதினுல் மிகுந்த கவனத்தோடும், தகுந்த முறைப்படியும் எழுத வேண்டும். பெரியோருக்கு வணக்கம் தெரிவித்தும் நண்பர்களுக்கு அன்பை அறிவித்தும் எழுத வேண்டும்.

கடிதத்தின் தலைப்பில், எழுதுபவர் பெயர், விலாசம், ஊர், தேதி முதலியவைகளை எழுத வேண்டும். சிலருடைய கையெழுத்திலிருந்து அவரது பெயரை அறிய முடியாது. இதனால்தான் பெயரைத் தலைப்பிலேயே எழுதுதல் நலம். விலாசம், ஊர் முதலியவை, கடிதம் பெறுவோர் பதிலெழுத உதவும். தேதியால் விடயங்கள் நடந்த காலத்தை யும் கடிதம் சரியான காலத்தில் வந்து சேர்ந்ததா என்பதையும் அறியலாம்.

கடிதத்தில் விடயங்களைத் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுத வேண்டும். எழுத்து எளிதில் புரியும்படி இருக்க வேண்டும். கடிதத்தின் முடிவில் கையெழுத்திடவேண்டும். எழுதிய கடிதத்தை மறு முறை சரிபார்க்க வேண்டும்.

கடிதத்தின் மேல் விலாசத்தை மறவாமல் தெளிவாக எழுதவேண்டும். கடிதம் பெறுபவரின் முழுப் பெயர், வேலை அல்லது தொழில், வீட்டு இலக்கம், தெருப் பெயர், ஊர்ப் பெயர், ஜில்லாவின் பெயர், அவசியமானல் இராஜ்யத்தின் பெயர் முதலிய வைகளைத் தெளிவாக எழுத வேண்டும். ஊர்ப் பெயரைக் கொட்டை எழுத்துக்களில் எழுதுதல் நலம்.

இரண்டு மூன்று கடிதங்கள் எழுதி உறையி லிடும்போது, ஒன்றுக்கொன்று மாறிவிடாமல் கவ னத்துடன் அந்தந்த விலாசதாருக்குரிய கடிதத்தை அந்தந்த உறையிலிட வேண்டும். ஒருவர் கடிதம் மற்றவருக்கு மாறிவிட்டால் பல துன்பங்கள் நேர்ந்து விடும். உறைகளில், கடிதத்துடன் ரூபாய் நோட்டு கள் வைக்கக்கூடாது.

எழுதி முடித்த கடிதத்தைத் தபால் பெட்டியில் போடுமுன், விலாசம் சரியாய் இருக்கிறதா என்றும், கடிதத்திற்குரிய தபால் தலைகள் ஒட்டப்பட்டிருக்கின்றனவா என்றும் சரிபார்க்க வேண்டும்.

விலாசம் எழுதும் முறை

15

நயே பைசே

திரு. வி. க. நடராஜபிள்ளை,

தலைவர், ஹரிஜன சேவா சங்கம்,

16, படேல் வீதி,

திருப்பத்தூர்.

(வட ஆற்காடு ஜில்லா)

## 2. அழைப்புக்கள்

(பெரியோருக்கு)

திண்டுக்கல் நேருஜி படிப்பக ஆண்டுவிழா

அழைப்பு

அன்புடையீர் !

நாளது விரோதி வருடம் சித்திரை மாதம் 10ஆம் தேதி (22–4–'49) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இந்நகர் முனிசிபல் உயர்தரப் பாடசாலையில் நேருஜி

வாசகசாலையின் முதல் ஆண்டு விழா நடைபெறும். அவ்வமயம் பல அன்பர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். யாவரும் வந்திருந்து விழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திண்டுக்கல்
18—4—'49

வி. சு. சூரியநாராயணன்
வி. சு. கோவிந்தன்
செயலாளர்கள்.

(சிறியோருக்கு)

மதுரை.
20–4–'49.

திருவளர்செல்வி, பார்வதிக்கு அநேக ஆசிகள். இவண் நலம். அவண் நலனறிய ஆவல்.

இவ்வூரில் வருகிற மே மாதம் முதல் வாரத்தில் சித்திரைத் திருவிழா ஆரம்பம் ஆகிறது. திருவிழாச் சமயத்தில் நகர சபையார் பெரிய பொருட்காட்சி ஒன்று நடைபெற ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் பலவிதக் கைத்தொழில் முன்னேற்றங்களையும் கலைத் திறன்களையும் காணலாம். இசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் நீ கண்டு கேட்டுக் களிக்க வேண்டிய தவசியம்.

ஆகையால் நீ உன் தங்கை சுப்புலட்சுமியுடன் மே மாதம் முதல் தேதியே புறப்பட்டு இங்கு வந்து சேர். நீ புறப்பட்டு வரும் நாளையும் நேரத்தையும் தெரிவி. நான் இரயிலடிக்கு வந்து வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன்.

ஊரில் உன் அம்மா, அப்பா முதலியவர்கள் சுக மாயிருக்கிருர்கள் என்று நம்புகிறேன். பிற பின்.

அன்புள்ள மாமா,
கி. வெ. சுப்பிரமணியன்.

விலாசம்:

செல்வி. வி. ந. பார்வதி,
நான்காவது படிவம்.
முனிசிபல் உயர்நிலைப்பள்ளி, திருப்பூர்.
(கோயம்புத்தூர் ஜில்லா.)

## 3. சமூக விடயங்கள்
### (பெரியோருக்கு)

236, ராஜ வீதி.
கோயம்புத்தூர்,
15-4-'49.

அன்பு மிக்க மாமா அவர்களுக்கு,

அநேக வணக்கம். இவ்விடம் யாவரும் சுகமே. அவ்விடம் எல்லோருடைய நலனுக்கும் அடிக்கடி எழுதக் கோருகிறேன்.

எங்கள் பள்ளிக்கூடத்து மாணவர் கழகத்தில் 13-4-'49ஆம் தேதி, தமிழ் வருடப் பிறப்பன்று, தமிழ்த் திருநாள் கொண்டாடினேம். அக்கொண்டாட்டத்திற்கு ரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். கடவுள் வணக்கம் ஆனதும், வேலூர் ரெவினியூடிவிஷனல் ஆபீஸர் திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் M. A., அவர்கள் கம்பன் கவிநயம் என்னும்

பொருள் பற்றி மிக அழகாகச் சொற்பொழிவாற்றினார்கள். அதன் பின் மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. வி. ஜி. ஸ்ரீனிவாசன் B.A., L.T., அவர்கள் வள்ளுவர் குறள் என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். பின்னர் காரைக்குடி அழகப்பாக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. ஆ. முத்து சிவன் B.A., அவர்கள் சிலப்பதிகாரச் சிறப்பு என்னும் விடயத்தை விரிவாக விளக்கினார்கள்.

தலைவர் முடிவுரையில் கம்பன், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகிய மூவரும் நம் தமிழ் நாட்டு இலக்கியக் கோவிலின் மும்மூர்த்திகள் என்பதை மிக அழகாக விளக்கிக் கூறினார். முடிவில் காரியதரிசி யாவருக்கும் நன்றி தெரிவித்ததும், நாட்டு வணக்கத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது. வந்திருந்தோர் யாவருக்கும் சந்தனம், வெற்றிலை பாக்கு வழங்கப்பட்டன.

நானும் அக்கொண்டாட்டம் முடியும்வரை இருந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தேன். வேறு விசேடமில்லை.

இங்ஙனம்,
தங்களன்புள்ள மருமகன்,
கி. நாராயணன்.

விலாசம்:

திரு. ரா. இராமலிங்கம் அவர்கள்,
முனிசிபல் கௌன்சிலர்,
இராமாயணச் சாவடித் தெரு,
மதுரை.

(சிறியோருக்கு)

பெரியகுளம்.
1-4-'49.

அன்புள்ள இராமசாமிக்கு,

அநேக ஆசிகள். நீ நன்கு படித்துப் பரீட்சைகள் சரிவர எழுதியிருப்பாய் என்று நம்புகிறேன். நிற்க,

அங்கு, மதுரைக் கல்லூரியில் 9-4-'49ஆம் தேதி மதுரை மாவட்டச் சிறுவர் சங்க வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெறப் போவதாக எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. நீயும் ஒரு சாரணன். ஆதலால் அக்கொண்டாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு சேவை செய்ய வேண்டியதவசியம். யான் அங்கு வர இயலவில்லை. கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகளை விவரமாக எனக்குக் கடிதம் மூலம் எழுது.

இவ்விடம் யாவரும் சுகம். உனது கோடைக்கால விடுமுறை ஆரம்பித்ததும் இங்குப் புறப்பட்டுவா. கமலாவும் உன்னை மிக ஆவலுடன் எதிர்பார்க்கிருள். வேறு விசேடமில்லை.

உன் அன்புள்ள தந்தை,
சங்கரநாராயணன்.

விலாசம் :

செல்வன் ச. இராமசாமி,
நான்காவது படிவம்,
சேதுபதி உயர்நிலைப்பள்ளி,
மதுரை.

# XIII உரையாடல்கள்

## 1. நண்பர்கள்

வேலன் : முருகா! எங்கே புறப்பட்டாய்?

முருகன் : நண்பா! நான் வீட்டுக்குத்தான் செல்லு கிறேன்.

வேலன் : கையில் ஒரு நாய்க்குட்டியை வைத்துக் கொண்டிருக்கிருயே! அதன் காலில் துணி சுற்றி யிருக்கிறதே! ஏன்?

முருகன் : வேலா! நான் அடுத்த தெரு வழியாக வந்துகொண்டிருந்தேன். அது மிகவும் குறுக லான தெரு. போக்குவரத்தும் அதிகம். இந்த நாய்க்குட்டியின் காலில் ஒரு வண்டி ஏறிக் கால் ஒடிந்துவிட்டது.

வேலன் : ஐயோ! பாவம்! உடனே நீ என்ன செய்தாய்?

முருகன் : அதைத் தூக்கிக்கொண்டு நமது மிருக வைத்திய சாலேக்குச் சென்றேன். அங்குள்ள டாக்டர் அதன் காலேச் சரிப்படுத்திக் கட்டி யிருக்கிருர்.

வேலன் : இன்னும் ஏன் அதைத் தூக்கிக்கொண்டு போகிருய்? காலேத்தான் சரியாய்க் கட்டியாகி விட்டதே?

முருகன் : ஒடிந்த காலேச் சரிப்படுத்திக் கட்டிய டாக்டர், அதைக் கால் சரியாகும் வரை அதிகம் நடக்கவிடக்கூடாது என்று கூறினுர். அதற் காகத்தான் அதைத் தூக்கிக் கொண்டு வருகி றேன்.

வேலன்: சரி! இனி என்ன செய்யப்போகிருய்?

முருகன்: என் வீட்டுக்குக் கொண்டுபோய், அதற்கு உணவு கொடுத்துப் படுக்க வைக்கப் போகிறேன். கால் சரியான பிறகுதான் அதனை வெளியில் அவிழ்த்து விடுவேன்.

வேலன்: தெருவில் திரியும் நாய்க்கு நீ ஏன் இவ்வளவு உதவி செய்கிருய்?

முருகன்: தெருவில் திரியும் நாயானுலும், அதுவும் ஓர் உயிர்ப் பிராணிதானே! வாயில்லாப் பிராணியான அது துன்பப்படும்போது நாம் பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பது நல்லதாகுமா? நான் அதனை எடுத்துச் சென்று வைத்தியம் செய்யவில்லையானல் அதன் நிலை என்னவாகும்?

வேலன்: அதெல்லாம் சரி! கால் சரியானதும் அது மறுபடியும் தெருவில்தானே திரியும். அப்பொழுது இம்மாதிரி ஏற்பட்டால் என்ன செய்வது?

முருகன் நண்பா! இதைப் பார்த்தால், யாரோ ஒருவர் வளர்த்த குட்டி மாதிரித்தான் தெரிகிறது. அதுவுமல்லாமல் ஒருதரம் துன்பமடைந்த பின் இம்மிருகமும் சாக்கிரதையாகவே இருக்குமல்லவா?

வேலன்: நண்பா! மிக்க மகிழ்ச்சி. வாயில்லாப் பிராணிகளுக்கு நாம் கட்டாயம் உதவி செய்ய வேண்டியதுதான். நானும் உன்னுடன் வந்து வேண்டியதைச் செய்கிறேன். இதன் சொந்தக்

காரரைத் தேடி, அவரிடம் இதை ஒப்புவித்து விடுவோம்.

முருகன் : சொந்தக்காரர் இல்லாவிட்டால் நாமே இதைக் காப்பாற்றுவோம்.

வேலன் : ஆம்! அதுதான் சரி. (போகிறார்கள்)

## 2. அந்நியர்

(மதுரை ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒரு பெரியவர் வருகிறார். அவரைப் பார்த்ததும்,)

வேலாயுதம் : ஐயா! தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்?

பெரியவர் : தம்பி! நான் சேலத்திலிருந்து வரு கிறேன். என் பெயர் ராமசாமிக் கவுண்டர். நான் இவ்வூருக்குப் புதியவன்.

வேலாயுதம் : என்ன வேலையாய்த் தாங்கள் இங்கு வந்தீர்களோ?

ராம : தம்பி! இவ்வூரைப் பார்ப்பதற்காகவே வந் தேன். இங்கு முக்கியமாகக் காணவேண்டிய இடங்கள் எவை?

வேலாயுதம் : ஐயா! இங்குக் காணவேண்டிய இடங்கள் பல இருக்கின்றன. மீனாட்சியம்மை கோவில், மாரியம்மன் தெப்பக்குளம், திருமலை நாயக்கர் மகால், தமுக்கம் பங்களா முதலிய வைகளே மிகவும் முக்கியமானவை.

ராம : தம்பி! இவைகளைப் போய்ப்பார்க்க எனக்கு வழி தெரியாதே. என்ன செய்வது?

வேலாயுதம் : ஐயா! நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நானே தங்களுடன் வந்து, இந்த

இடங்களையும் மற்ற இடங்களையும் காண்பிக்கின்றேன்.

ராம: நல்லது தம்பி! உன்னைப் போலவே எல்லோரும் இருந்தால் நம் நாடு விரைவில் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

வேலாயுதம்: ஐயா! ஏதோ பெரிய உதவி செய்வதாக நினைத்துப் பேசுகிறீர்கள். இது எனது கடமைதான். ஒவ்வொரு மனிதனுடைய கடமையும் இதுவே.

ராம: சந்தோஷம் தம்பி! வா போகலாம்.

(வேலாயுதம், ராமசாமிக் கவுண்டருக்கு எல்லா இடங்களையும் காட்டி, அவற்றின் வரலாற்றையும் எடுத்துச் சொன்னான். இருவரும் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள்.)

---

## 3. ஆசிரியர் மாணவரிடை

ராமசாமி: ஐயா! தற்காலக் கல்வி முறையில் ஏதோ சில முற்போக்கான மாறுதல்கள் இருக்கின்றதாகக் கூறுகிறார்களே. அவை யாவை?

ஆசிரியர்: ஆமாம், பல இருக்கின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமான ஒரு செய்தியைப் பற்றிக் கூறுகிறேன்.

முத்து: ஐயா! அப்படியானால் சமூக வாழ்வில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றித் தயவு செய்து கூறுங்கள்.

ஆசிரியர்: சரி. நீ இப்போது கேட்ட விடயந்தான் குடிமைப் பயிற்சி என்று சொல்லப்படுகிறது.

வேலன்: தாங்கள் கூறும் குடிமைப் பயிற்சிக்கும் குடிசைத் தொழிலுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டோ?

ஆசிரியர்: இல்லே, இல்லே. இது வேறு; அது வேறு. குடிமைப் பயிற்சி என்பதில் மனிதர் சமூகத்திலே தனி மனிதன் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லப்படுகிறது.

முத்து: எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ஐயா?

ஆசிரியர்: மனிதனுகப் பிறந்தவன் தனக்காக மட்டும் வாழப் பிறந்தவன் அல்ல; பிறருடைய நல்வாழ்வுக்காகவும் அவன் பிறந்தவன். தனக்கென வாழ்வது உரிமை எனப்படும். பிறர்க்கென வாழ்வது கடமை எனப்படும். இந்தக் கடமையும் உரிமையாகக் கொண்டு நடந்து வரவேண்டும்.

வேலன்: ஐயா! எந்தெந்த முறையில் பிறருக்கு உதவியாக நடந்து கொள்ள வேண்டும்?

ஆசிரியர்: பிள்ளேகளே! ஒரு மனிதன் தனது மனம், சொல், உடல் என்ற மூன்றிலும் சுற்றுப் புறங்களிலும் தூய்மையுடையவனுக இருக்க வேண்டும். அவ்வாறு அவன் நடந்து காட்டுவதனுல் பிறருக்கும் வழிகாட்டியாக விளங்குகிருன். இதனுடன் அவன் மற்றவர்களேயும் தூய்மை யுடையவர்களாகச் செய்ய முயல வேண்டும். அதுவே அவன் கடமையாகும்.

முத்து: தனிப்பட்ட ஒரு மனிதன் சுத்தமுடையவனுக இருத்தலினுல் பிறருக்கு என்ன நன்மை யுண்டாகும் ?

ஆசிரியர்: முதலாவது, இவன் தூய்மையால் மற்ற வர்களுக்கு வழி காட்டுகிருன். தன் சுற்றுப்புறங் களே, பிறருக்கு இடைஞ்சல் இன்றிச் சுத்தமாக வைத்துக்கொள்கிருன்.

வேலன்: அவ்வாறு ஏன் செய்ய வேண்டும் ?

ஆசிரியர்: ஒருவன் தன் வீட்டைச் சுத்தமாக வைத் துக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் அடுத்த வீட்டுப் பக்கத்தில் குப்பை கூளங்களே ஒதுக்கக் கூடாதல்லவா ? இவ்வாறே ஒவ்வொரு வீட்டுக்காரரும் தமது பொறுப்பையும் கடமை யையும் உணர்ந்து நடந்து கொண்டால் ஊரும் சீர்படும்; சமூக வாழ்வும் முன்னேற்றமடையும். இதன் மூலம் நாம் பெரிய சமூக சேவை செய்த வர்களாகிருேம். தவிரவும் பொதுநலத்திற்காக உழைக்கும் ஸ்தாபனத்திற்கும் உதவுகிருேம்.

முத்து: உண்மைதான் ஐயா! ஆனுல், இதனுல் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன ?

ஆசிரியர்: சுற்றுப்புறங்களேச் சுத்தமாக வைப்பதால், தொற்று நோய்கள் வராமல் ஊரிலுள்ளவர்களேச் சுத்தமாக வாழும்படி செய்யலாம். சமூக வாழ்வில் மனிதனுடைய மதிப்பும் உயரும்.

மாணவர்கள்: ஐயா! மிகவும் முக்கியமான இவ் விடயத்தைத் தெரிந்துகொண்டோம். மிகவும் வந்தனம், ஐயா!

---

TB P31(6) N56
86832

Regd. 1c
26/10/58
2.7.64/c 385
223

Used 24 lbs. Double Crown white printing

வி. ஞு. சுவாமிநாதன்
பதிப்பாளர்

மதுரை : : சென்னை-1

பதிப்புரிமை] [விலை 90 ந. பை.